பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 20 வெள்ளிக்கிழமை (05.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:009

# யுத்த நிறுத்தத்தை வலியுறுத்த இலங்கை வருகிறார் பிரணாப்

## தமிழகத் தலைவர்கள் - பிரதமர் மன்மோகன் சந்திப்பில் முடிவு

புதுடில்லி, டிசெம்பர் 05



இலங்கையில் யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசிடம் வலியுறுத்துவதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் விசேட தூதுவராக, வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்புக்கு வரவிருக்கிறார்.

இலங்கை விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்கள் டில்லியில் நேற்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசியபோதே பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

பிரதமரைச் சந்திப்பதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள் நேற்றுமுன்தினம் டில்லி சென்றனர். நேற்றுக்காலை 10 மணியளவில் தமிழக அனைத்துக்கட்சித் தலைவர்கள் டில்லி தமிழ்நாடு இல்லத்தில் இருந்து தனி பஸ்ஸில் பிரதமர் அலுவலகத்திற்குச் சென்றனர்.

10.15 மணிக்கு முதலமைச்சர் கருணாநிதி (15 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், டிசெ.5

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை இன்ற இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அதிகாரி மேஜர் பேர்ட்டி பெரேரா தெரிவித்தார்.

கப்பல் பயணிகள் இன்று காலை சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல் (16 ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடரில்**

இன்று - ஆங்கிலம்

## குடாநாட்டின் பாதிப்புக்களை நேரில் பார்வையிட்டு நிலைமையைச் சீராக்க அமைச்சர் ரிதியுதீனிடம் வலியுறுத்து

### கூட்டமைப்பினர் சந்தித்து அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5

குடாநாட்டில் 'நிஷா' புயல் மற்றும் பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புக்களை நேரில் பார்வையிட்டு, சீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் நிலையை அனைத்திந்திய அரசியல் தலைவர்களுக்கு எடுத்துரைக்க கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு இந்தியாவுக்கு

யாழ்ப்பாணம், டிசெ.5

தமிழ் மக்களின் அவலங்கள் அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வு ஆகியன தொடர்பாக இந்தியாவில் உள்ள சகல கட்சிகளின் தலைவர்களுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குழு விளக்கம் அளிக்க இருக்கிறது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை நிறுத்துமாறு அரசிடம் ஐ.தே.க. ஒருபோதும் கோராது!

### பிரபாவை மாத்திரமல்ல அவரது சித்தப்பாவையும் கொல்லவேண்டுமாம்

கொழும்பு, டிசெ.5

புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்யுமாறு ஐ.தே.கட்சி ஒருபோதும் அரசிடம் கோராது என்றும், புலிகளின் தலைவர் பிரபாகரனை மாத்திரமன்றி அவரின் சித்தப்பாவையும் அரசு கொன்றொழிக்கவேண்டும் என்றும் ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷ்மன் செனவிரட்ண நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை ஆகியவை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு :-

நாம் புலிகளின் ஆதரவாளர்கள் அல்லர். எம்மீது அரசு புலி முத்திரை குத்தக்கூடாது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## எந்த அழுத்தத்துக்கும் அடிபணிந்து நாம் யுத்தத்தை நிறுத்தப்போவதில்லை - பிரதமர்

கொழும்பு, நவ.5

யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் அமைதிப் பேச்சை நடத்துமாறு பல தரப்பினரிடமிருந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது -நாட்டில் இருந்து பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படும்வரை எந்தச் சவால்களுக்கும், அழுத்தங்களுக்கும் அடிபணிந்து அரசு யுத்தத்தை நிறுத்தாது.பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் இவ்வாறு அழுத்தமாகத் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தத்தின் பிடிக்குள் மீண்டும் ஒருமுறை சிக்கமாட்டோம் என்றுகூறிய (15 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் தலைவருடன் சர்வமதக் குழு சந்திப்பு

கொழும்பு, டிச. 05

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனை அண்மையில் சர்வமதக் குழுவினர் கொழும்பு, தாஜ் சமுத்திரா ஹோட்டலில் வைத்து சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஐரோப்பிய, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சர்வமதப் பிரதிநிதிகள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக்கடலில் மீண்டும் தாழமுக்கம் காற்றுடன் மழை பெய்யும் சாத்தியம்

### தீவிரமடைந்து சூறாவளியாக வேகம் கொள்ளுமா என்பது குறித்து தகவல் இல்லை

கொழும்பு, டிசெ.5

வங்காளவிரிகுடாவின் மத்திய பகுதியில் காற்றழுத்த தாழ்வுநிலையொன்று உருவாகியுள்ளது. இது மேலும் தீவிரமடைந்து வடமேல் திசைக்கு நகரக் கூடும் என்று வளிமண்டல அவதான நிலையம் அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை 6.00 மணிக்கு உருவான இந்த தாழமுக்கம் காரணமாக இலங்கையின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளம் படை வசமாம்

கொழும்பு, டிசெ.5

வவுனியா மாவட்டம் புளியங்குளம் பகுதியை நேற்று மாலை இராணுவத்தினர் தம்வசப்படுத்தியிருக்கின்றனர் எனப் பாதுகாப்புத் தரப்பு நேற்று இரவு செய்தி வெளியிட்டது.

ஓமந்தை சோதனைச் சாவடியிலிருந்து 8.5 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஏ - 9 பிரதான வீதியில் உள்ள இந்தப் பகுதி நேற்று மாலை விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற கடும் மோதலின் பின்னர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதில் நிலவிய சர்ச்சை தீர்ந்தது

### செஞ்சிலுவைக் குழுவின் மேற்பார்வையிலேயே நடைபெறும்

கொழும்பு, டிசெ. 5

வன்னியில் இராணுவ நடவடிக்கைகளின் மத்தியில் சிக்கியுள்ள மக்களுக்கென இந்திய அரசு வழங்கிய நிவாரணப் பொருள்களை யார் விநியோகிப்பது என்பது குறித்து இலங்கை அரசுடன் தோன்றிய கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டு விட்டது எனச் செஞ்சிலுவை சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆரோக்கியமான வாழ்விற்கு அவசியமானது பாதுகாப்பான குடிதண்ணீர்

**நீரைச் சுத்திகரிக்கும் முறைகள்**

⇨ நீரை நன்றாகக் கொதிக்கவைத்து ஆறவைத்துப் பருகுதல்

⇨ சோடிஸ் முறை: சூரியஒளி புகக்கூடிய நிறமற்ற பிளாஸ்ரிக் போத்தல்களில் நீரை நிரப்பி 6 மணித்தியாலங்கள் சூரிய ஒளியில் கறுப்பு அல்லது ஒளி தெறிக்கக்கூடிய மேற்பரப்பில் வைத்தல்.

⇨ நீரைச் சுத்திகரிக்கும் வில்லைகள் மூலம் சுத்திகரித்தல்

தெளிந்த நீரைக் கொள்கலனொன்றில் எடுத்து 5 லீற்றர் நீருக்கு ஒரு சுத்திகரிப்பு வில்லை என்ற வீதத்தில் வில்லைகளையிட்டு 30 நிமிடங்களின் பின் குடிக்க அல்லது சமைக்கப் பாவிக்கலாம்.

⇨ உங்களுக்குத் தேவையான நீரைச்சுத்திகரிக்கும் வில்லைகளை உங்களது பகுதி பொது சுகாதாரப் பரிசோதகரிடம் அல்லது குடும்பநல உத்தியோகத்தரிடம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை: Care International

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கேள்வி அறிவித்தல் - 2009

ஆதார வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை/ துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் - 2009ஆம் ஆண்டுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

★ 05.12.2008 முதல் காரியாலய நேரத்தில் விண்ணப்பப் படிவங்கள் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

★ 20.12.2008 பகல் 12 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

★ 20.12.2008 பி.ப. 3.30 மணிக்கு விண்ணப்பங்கள் திறந்து பரிசீலிக்கப்படும். விண்ணப்பதாரர்களும் அவ்வேளை சமுகமளிக்கலாம்.

Dr.V.ஜெயராஜா

பதில் மாவட்ட வைத்திய அதிகாரி, தலைவர், அபிவிருத்திக் குழு.


## மனித உரிமைகள் பேச்சுப் போட்டிகள்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையும் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 60 ஆவது ஆண்டு நினைவையும் முன்னிட்டு பேச்சுப் போட்டிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளன.

வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களை அன்று காலை 9 மணிக்கு அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் கடந்த 29 ஆம் திகதி நடத்த ஏற்பாடு செயயப்பட்டு காலநிலை சீரில்லாததால் பிற்போடப்பட்டிருந்தன.


## சேவை நலன் பாராட்டு



எமது வித்தியாலயத்தில் நீண்ட காலமாக சைவசமயப் பாட ஆசிரியராக கடமையாற்றி பின் தீவகக் கல்வி வலயத்தில் சைவ சமய பாட சேவைக்கால ஆலோசகராகக் கடமையாற்றி ஓய்வு பெறும்

செல்வி

ஜெயலெட்சுமி இராமலிங்கம்

அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவர் நீண்ட ஆயுளும் குறையாத செல்வமும் பெற்று வாழ வேண்டும் என நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனைப் பிரார்த்திக்கிறோம்.

வாழ்த்துவோர்: பாடசாலை சமூகம்
யா/நயினாதீவு மகாவித்தியாலயம்.



இன்று முதல்

மாபெரும் மலிவு விற்பனை

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
வாடிக்கையாளரின் நன்மை கருதி





காவேரியின்
மாபெரும் மலிவு விற்பனை

05.12.2008 முதல்
விசேட விலைக் கழிவில்
அள்ளிக் கொள்ள...

MEGA SALE

காவேரிசில்க்ஸ்

மாபெரும் மலிவு விற்பனை

48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

★ ஞாயிற்றுக்கிழமைகளில் கடை திறந்திருக்கும்


### கிணற்றில் தவறிவீழ்ந்த சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.5

ஊரெழுவில் சிறுமி ஒருவர் நேற்று கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமானார்.

ஊரெழுவைச் சேர்ந்த மகேந்திரம் பிரதீபா (வயது 15) என்பவரே மரணமானார்.

அவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(1-25)

### சரசாலை பாதை ஊடாக மீண்டும் போக்குவரத்து

ஒரு வார இடைவெளியின் பின்னர் சரசாலை - துன்னாலை வீதியில் நேற்றுமுன்தினம் தொடக்கம் போக்குவரத்து ஆரம்பமானது.

இவ் வீதியில் மதகு அமைப்பதற்காக போடப்பட்டிருந்த தற்காலிக மண் பாதைக்கு மேலாக வெள்ளம் வடிந்து கொண்டிருப்பதாகவும், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவை மட்டும் தற்போது போக்குவரத்து செய்யக்கூடிய நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(1-207)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்ற

திருமதி

புஷ்பராணி பஞ்சாட்சரம்

அவர்கள் குடித்தொகை அபிவிருத்தி முதுகலைமாணிக் கற்கைநெறி (M.A) 2007 பரீட்சையில் சிறப்புச் சித்தி எய்தியமையை இட்டு அவரைப் பாடசாலை ஆசிரியர் கழகம் வாழ்த்துவதோடு இவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று நீடூழி காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

யா/வட்டு மத்திய கல்லூரி ஆசிரியர்கழகம்.



வசீகர தோற்றத்திற்கு

சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகை தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விரத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.



'சிவா நறுமணப் பூங்கா'

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

(ஓ/555203)





யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

புலமையாளர் கௌரவிப்பு நாள்



எமது பாடசாலையின் தேசிய விருதிற்கான கனவை நனவாக்கிய தரம் 10 மாணவன்

செல்வன் ந.பிரசாந்தன்

2007 தேசிய புத்தாக்கத்திற்கான ஜனாதிபதி மற்றும் தேசிய விருதை வென்றெடுத்தமைக்காகப் பாராட்டி வாழ்த்துவதில் பாடசாலை ஆசிரியர் குழாம் பெருமிதம் கொள்கிறது.



1 2 3 4 5

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2008 இல் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமைமையச் சேர்த்த மாணவச் செல்வங்களான

| | |
|---|---|
| 1) கந்தகுமார் மதுராந்தா | - 148 |
| 2) வரதராசன் கிரிஷிகா | - 120 |
| 3) ஸ்ரீரூபன் கம்சன் | - 119 |
| 4) சசிதரன் அர்ச்சனா | - 118 |
| 5) இராசேந்திரம் மகிந்தன் | -114 |

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/ கோப்பாய்
சரவணபவானந்த வித்தியாலயம். ஆசிரியர் கழகம்.



பதவிவெற்றிடம்

1. ஆங்கில மொழியில் கணிதம், விஞ்ஞானம், வரலாறு கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள்.
2. அலுவலக உதவியாளர் (ஆண்).

தொடர்பு:
DIRECTOR
"BITSMANS"
INSTITUTES
MANIPAY.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சகுந்தலாதேவி சிவராமலிங்கம்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சகுந்தலாதேவி சிவராமலிங்கம் நேற்று (04.12.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா(ஆசிரியர்) - மீனாட்சியம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவராமலிங்கத்தின் அன்பு மனைவியும் சிவதாஸின்(பிரான்ஸ்) பாசமிகு தாயாரும் சிந்துஜாவின்(பிரான்ஸ்) மாமியாரும் காலஞ்சென்ற தாயுமானவர் (அப்பர்), கமலாதேவி ஆகியோரின் சகோதரியும், கமலாதேவி, தருமராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.12.2008) வியாழக்கிழமை பி.ப 2மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சக்தி அகம்",
அளவெட்டி வடக்கு. (80469)

தகவல் :
க.தருமராசா (மைத்துனர்).

### தம்பிப்பிள்ளை செல்லத்துரை



அரியாலையைப் பிறப்பிடமாகவும் இல. 85/9, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும்கொண்ட தம்பிப்பிள்ளை செல்லத்துரை நேற்று (04.12.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் இளைய புதல்வனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னையா-இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் வசந்தகுமார் (லண்டன்) இரத்தினகுமார் (டென்மார்க்), இந்திரகுமார் (பிரான்ஸ்), வசந்தகுமாரி, சந்திரகுமார் (லண்டன்), சூரியகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கோவிந்தர், தங்கம்மா, பொன்னுத்துரை, செல்லம்மா, நல்லம்மா, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான யோகநாதன், துரைராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சறோஜினி, தவலட்சுமி, தவயோதி, காலஞ்சென்ற தவபாலன் (ஆசிரியர்) மற்றும் ஜாமினி, புனிதவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெய்சாந்தி, சௌமியா, றாம்குமார், றஜிதாஸ், பிந்துறாஜ், தினேஸ்ராஜ், நிருஜா, நிரோஜா, சதீஷ், பிரசாத், தனுஜன், சிந்துஜன், அஜித், பவானந், சேசானந், பவினா, அர்ஜூனா, அபிராமி, சுபன், சுஜன், சுவீற்றி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

85/9, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (80450)

தகவல்:
மனைவி.

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திருமதி கொ. ஷிறாந்தினி அவர்களின் அன்புத் தாயார்

கிறிஸ்தோப்பர் றேமன் சலேசியஸ்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும் , உத்தியோகஸ்தர்களும்,
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், கரவெட்டி.

## கச்சாய் வீதி திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ. 05

கச்சாய் மற்றும் அல்லாரைப் பகுதி பொதுமக்களின் நலன்கருதி தம்பு தோட்டத்திற்கு முன்பாக உள்ள கச்சாய் வீதி மக்களின் போக்குவரத்துக்காக தற்காலிகமாக திறந்து விடப்பட்டுள்ளது.

அப்பகுதி மக்கள் பயணிக்கும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அவை சீராகும் வரை இவ்வீதி திறந்து விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(1-207)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் அருமைமுத்து செல்வராசா

தோற்றம்: 20.05.1924 மறைவு: 05.11.2008

அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றிற்காக இன்று (05.12.2008) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இல.17, 1ஆம் குறுக்கு வீதி,
பாசையூர்,யாழ்ப்பாணம்.

மனைவி,மக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## தவறி விட்டது

தபாலயம், கோண்டாவில் வீதி, கோப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த யோகேஸ்வரன் யேமினா என்பவரது தேசிய அ.அட்டை (827421405V), ஐமுகன் யோமினா என்னும் பெயருடைய தொழில் அ.அட்டை (JIC No.61/2006) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் அல்லது ஹரன் புடைவையகம், பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். T.P. 222 2697

(ஓ/555872)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தெற்கைக் கவர்ந்திழுக்கும் போர் வெ(ற்)றிப் பொறி!

ஈழத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அடக்குமுறையாலும், ஆயுத பலத்தாலும் முடிவு கட்டத் தீர்மானித்துவிட்ட கொழும்பு அரசு, அதனால் போர் முனைப்பில் தீவிரமாக நிற்கின்றது என்பது இன்று வெளிப்படையானது.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, அவர்களை நிரந்தரமாக அடிமைகளாக்கும் நோக்குக் கொண்ட இந்த இன அழிப்புப் போர், தமிழரின் நிம்மதியான வாழ்வைக் கெடுத்து, அவர்களை நிரந்தர அகதிகளாக்கி, அவர்களின் சமூக, பொருளாதார வாழ்வையும், அடிப்படைக் கட்டுமானங்களையும் அடியோடு சீரழித்து, தமிழர்களுக்கு முன்னெப்போதும் இல்லாதவாறான பேரவலத்தைக் கொடுத்து நிற்கின்றது.

தமிழர் தாயகப் பகுதிகள் மீது கொடூர யுத்தத்தைத் தொடுத்து, அப்பிரதேசங்களைக் கைப்பற்றி, சிங்கக் கொடிகளை ஏற்றி, சித்தார்த்தன் சிலைகளை நட்டு, ஆரவாரம் செய்து, பௌத்த - சிங்களப் பேரினவாதமே தேசத்தின் சித்தாந்தமாக - தேசியக் கொள்கையாக - கருதி, அதை விரிவுபடுத்தி, விஸ்தரிக்கும் கைங்கரியத்தை கொழும்பு கனகச்சிதமாக முன்னெடுத்து வருகின்றது.

தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஆயுத முனையில் அடக்கியாளும் தீர்வை எட்டியே தீருவது என்பது 'மஹிந்த சிந்தனை' திட்டம் என்று அடையாளப்படுத்தப்பட்டாலும், அது இந்த அரசுடனும், அதை வழிநடத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

அதுவே, 'சிங்களத்தின் சிந்தனைச் சித்தாந்தம்' என அர்த்தப்படுத்தப்படும் விதத்தில் இவ்விடயத்தில் ஒரேவிதமான எண்ணப் போக்கு சிங்கள இனம் மத்தியில் தீவிரம் பெற்று விரிந்து வருவதை உறுதியாக அவதானிக்க முடிகின்றது.

யுத்த நிறுத்தம், அமைதிப் பேச்சு, இணக்கத் தீர்வு என்ற கோஷங்களுடன் தென்னிலங்கையில் உலா வந்த - ஐ.தே.கட்சியின் தலைவரும், எதிரக்கட்சித் தலைவருமான - ரணில் விக்கிரமசிங்க, அண்மைக்காலம் வரை 'யுத்தத்தை நிறுத்தி, அமைதித் தீர்வைக் காணுங்கள்!' என்றே அரசை வற்புறுத்தி வந்தார். தனது அரசியல் நோக்கங்களை எட்டுவதற்காக இந்த அரசு, யுத்தத்தைத் தீவிரப்படுத்தி, அப்பாவி சிங்கள இராணுவத்தினரைப் பலி கொடுத்து வருகின்றது என்று காட்டமாக விமர்சிக்கும் நிலையில் அவரது கருத்து நிலைப்பாடு அப்போது இருந்தது. இதுவே, அவரது கட்சியின் கருத்தாகவும் அச்சமயத்தில் தொடர்ந்தது.

ஆனால், நிலைமை இப்போது தலைகீழாக மாறிவிட்டது. சமாதானத் தீர்வு, அமைதி முயற்சி பற்றிய சிந்தனை எல்லாம் அடிபட்டுப் போய்விட்டன.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, சிங்கள இராணுவத்திடமிருந்து தினசரி கிட்டிவரும் வெற்றிச் செய்திகள், முழு சிங்களத்தின் மூளையத்தையுமே பற்றிப் பீடித்து, ஆக்கிரமிப்பு வெற்றி உறுதி என்ற நம்பிக்கையைத் தந்து நிற்பதால், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது கட்சியினரும் கூட இந்த பௌத்த - சிங்கள தேசிய கருத்தாதிக்குள் முற்றாகச் சிக்குப்பட்டு விட்டனர். அதனால், அவர்களும் வெளிப்படையாகவே அந்தக் கருத்தாதிக்கத்தின் கொள்கைப் போக்கை சிலாகித்துப் பேசும் நிலைமைக்கு வந்துவிட்டனர்.

ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட பிரமுகரான லக்ஷ்மன் செனிவிரத்ன, நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில், புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யுமாறு அரசுக்குத் தமது கட்சி அழுத்தம் கொடுக்காது என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டதோடு, புலிகளை அழித்து, போர் முடிவுறுவதை பார்ப்பதற்கு தமது கட்சி சிரத்தையுடன் காத்திருக்கிறது - பார்த்திருக்கிறது - என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த அரசின் வரவு-செலவுத் திட்டத்தை முற்றாக எதிர்ப்பதாக ஏற்கனவே ஐ.தே.கட்சி அறிவித்துள்ள போதிலும், பாதுகாப்புச் செலவினம் மீதான அரசின் ஒதுக்கீட்டைத் தமது கட்சி ஆதரிக்கும் என்றும் லக்ஷமன் செனவிரத்ன நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

இதுவரை, இந்த அரசின் வரவு-செலவுத் திட்டங்களை 'யுத்த பட்ஜெட்' என்று காட்டமாக விமர்சித்துக் கண்டித்து வந்த ஐ.தே.கட்சி, யுத்தத்தில் சிங்களத் தரப்புக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்ற நிலை தோன்றியதும், யுத்தத்துக்கான ஒதுக்கீட்டை ஆதரிக்கும் நிலைமைக்கு குத்துக்கரணம் அடித்துவிட்டது.

இதுவரை காலமும், ஆளும் கட்சித் தரப்பில் நிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜாதிக ஹெல உறுமய மற்றும் எதிரணியில் நிற்கும் ஜே.வி.பி., விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி போன்றவையே தமிழர் தரப்பை யுத்தத்தில் அடக்கி வெல்லும் போர் வெறிப்போக்கு நிலைப்பாட்டையவையாக பகிரங்கமாகச் செயற்பட்டு வந்தன.

இப்போது அந்த அணியில் ஐ.தே.கட்சியும் இணைந்திருப்பது போர் வெ(ற்)றிப் பொறிக்குள் முழு சிங்கள இனத்துவமுமே வீழ்ந்து விட்டமையையே காட்டுகின்றது.

# வடக்கு - கிழக்கு வெள்ள நிவாரண பணிக்கு அமெரிக்க அரசு ஒரு லட்சம் டொலர் நிதியுதவி

கொழும்பு, டிச. 05

வடக்கிலும் கிழக்கிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, அவசரகால நிவாரணமாக அமெரிக்க அரசு ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்குகின்றது.

இலங்கை அனர்த்த முகாமைத்துவ மையம், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜன்ஸிக்கு விடுத்த கோரிக்கைக்கு இணங்க இவ்வுதவி வழங்கப்படவுள்ளது என இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அண்மைய நாள்களில், குறிப்பாக, யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் ஏற் பட்டுள்ள பாரதூரமான வெள்ளப் பெருக் மக்களைப் பாதுகிற்குள்ளானவர்களை இலக்காகக் கொண்டு வழங்கப்படும் இந்த ஐக்கிய அமெரிக்கக் கொடை, உணவல்லாத நிவாரணப் பொருள்களுக்காகப் பயன்படுத்தப்படும். உள்ளூராட்சிச் சபைகளுடன் ஒருங்கிணைந்து, யுனிசெவ் இக்கொடையை நிர்வகிக்கும்.

''இந்த அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இலங்கை மக்களுக்கு, நிவாரணம் வழங்குவதற்கு உதவும்படி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, உதவுவதற்கு அமெரிக்க அரசு மிக ஆர்வமாக இருக்கின்றது''-எனஇலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் கூறினார்.

வடக்கில் 4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலைமை கருதி அப்பகுதிகாப்பாக வைத்துக்கொள்வதற்கு நாம் இணைந்து பணிபுரிய வேண்டியது அத்தியாவசியம்' - என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வெள்ளம் காரணமாக யாழ்ப்பாணத்தில் 10 ஆயிரம் குடும்பத்தினர் இடம்பெயர்ந்து, 135 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த வெள்ளத்தினால் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவும், 6000 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. வன்னிப்பிரதேசத்தில் 21 ஆயிரத்துக்கும் மேலான குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. அத்துடன், ஆயிரம் நிரந்தர வீடுகளும், 6000 தற்காலிக உறைவிடங்களும் சேதத்துக்குள்ளாகியிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# சேதமடைந்த தொலைபேசி இணைப்புக்களை சீரமைப்பதற்கு ஒரு மாத காலம் எடுக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ். குடாநாட்டில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை, புயற்காற்றுக் காரணமாகச் சேதமடைந்துள்ள தொலைபேசி இணைப்புக்களை முழுமையாகச் சீரமைப்பதற்குக் குறைந்தது ஒரு மாத காலம் எடுக்கும் என யாழ். ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

புயற்காற்றினால் மரங்கள் முறிந்து விழுந்தமையால் தொலைபேசிக் கேபிள்கள் துண்டிக்கப்பட்டதுடன் கம்பங்களும் சரிந்து விழுந்துள்ளன. இவற்றைச் சீர்செய்யும் பணியில் ரெலிக்கொம் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். குடாநாட்டில் உள்ள 8 ஆயிரம் தொலைபேசி இணைப்புக்களில் ஆயிரத்து இருநூறு இணைப்புக்கள் சேதமடைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பாக தினசரி எமக்கு 200 முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன.

சேதமடைந்த இணைப்புக்களைத் திருத்தியமைக்கும் பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன. அடுத்த ஒருமாத காலத்துக்குள் அனைத்து இணைப்புக்களும் சீர்செய்யபட்டுவிடும் என அந்த வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. (50-111)

# மாவைக் கந்தன் ஆலயத்தில் திருக்கார்த்திகைக்கு விசேட பூசைகள்

யாழ்ப்பாணம்,டிச.5

திருக்கார்த்திகை தினம் எதிர்வரும் வியாழக்கிழமை கார்த்திகை 26 ஆம் திகதியாகும். அன்றைய தினம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் கார்த்திகைத் திருவிழா வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேகம், ஆராதனைகள், மாவிளக்கேற்றல், அர்ச்சனைகள், பிரார்த்தனைகளும் நடைபெறும் என்று ஆலய ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமான மஹாராஜஸ்ரீ து.சண்முகநாதக் குருக்கள் அறிவித்துள்ளார்.

மேற்கண்ட விசேட பூசைகளில் அடியார்கள் கலந்து கொள்ளும் பொருட்டு ஆலயத்திற்குச் செல்வதற்கான விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு முன்னதாகப் பக்தர்கள் தெல்லிப்பழை சோதனை நிலையத்துக்கு வந்தால் அங்கிருந்து ஆலயத்திற்குச் சென்று திரும்ப விசேட வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

அர்ச்சனை மற்றும் மாவிளக்குக்கு உரிய பொருள்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. (அ)

# கிணற்றுக்குள் தவறி விழுந்ததில் மாணவி உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், டிசெ.5

கிணற்றடிக்கு முகம் கழுவச் சென்ற மாணவி கிணற்றுக்குள் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார். ஊரெழு வடக்கு, சுன்னாகத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஊரெழு கணேச வித்தியாசலையில் தரம்-10 கல்வி கற்கும் மகேந்திரம் பிரதீபா என்பவரே உயிரிழந் தவராவார்.

நேற்றுக்காலை 8 மணியளவில் இவர் கிணற்றடிக்கு முகம் கழுவச் சென்றதாகவும் கம்பி அறுந்ததில் கிணற்றுக்குள் தவறி விழுந்து உயிரிழந்ததாகவும் கூறப் பட்டது. சடலம் யாழ். போதனா வைத்தியசாலயின் பிரேத அறையில் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது. (203-78-72)

# திருட வந்தவர்கள் என்ற சந்தேகத்தில் பிடிக்கப்பட்டவர்கள் இப்போது ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், டிச. 05

அரியாலைப் பகுதியில் திருவதற்கு வந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் அந்தப் பகுதி மக்களால் பிடிக்கப் பட்ட இருவர் நையப் புடைக்கப்பட்ட பின்னர் யாழ்.போதனா வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வந்துள்ளதாவது:-

நேற்று இரவு அரியாலைப் பகுதியில் திருடவந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் அப்பகுதி மக்களால் இருவர் பிடிக்கப்பட்டுள்ளனர்.

பின்னர் இருவரும் நையப் புடைக்கப்பட்ட பின்னர் அப்பகுதி மக்களாலேயே யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருபாலை, கட்டைப்பிராயைச் சேர்ந்த 34 வயதான ஒருவரும் 24 வயதான ஒருவருமே யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (203-78)

# சாவகச்சேரி நகரைச் சீர்செய்வதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்புக் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், டிச.5

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ''நிஷா'' காற்றினால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர் செய்து சுத்தமாக வைத்திருக்க பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கோருகிறார் நகரசபை செயலாளர்.

சபையின் உழவு இயந்திரம் குப்பை அகற்றும் பணியுடன் நலன்புரி நிலையங்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் 'லாண்ட் மாஸ்ரர்' வாகனம் நகரப் பகுதியில் குப்பை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தொழிலாளர்கள் குப்பை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் குப்பைகளை கண்ட இடங்களிலும் போடாமல் ஓரிடத்தில் வீதியோரமாக குவிக்கப்படும் பட்சத்தில் குப்பை அகற்றும் பணியினை இலகுபடுத்த முடியும் எனவும் நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (203-207)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 21 06.12.2008 | |
| | சனிக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | மு.ப.10.04வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | மு. இ. 10.57வரை |
| சுபநேரம்: | 03.17 - 04.47 |
| ராகுகாலம்: | 09.17 - 10.47 |

# 'பாதுகாப்பான புலம்பெயர்வு' விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.5

'பாதுகாப்பான புலம்பெயர்வு' விழிப்புணர்வுக் கருத்தரங்கு தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலங்கள் ஊடாக நடைபெறவுள்ளது.

புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தினரால் (ஐ.ஓ.எம்) ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு குறிப்பிட்ட திகதிகளில் மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணிவரை இடம்பெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி சங்கானைப் பிரதேசத்திலும், 9 ஆம் திகதி தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திலும், 10 ஆம் திகதி சிறுப்பிட்டி கிழக்கு ஜி.ரி.இசற் பொது மண்டபத்திலும், 11 ஆம் திகதி கரவெட்டிப் பிரதேச செயலத்திலும், 12 ஆம் திகதி சாவகச்சேரிப் பிரதேசத்திலும், 13 ஆம் திகதி யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளன. (204)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் சுகாதாரப் பணிகள்

யாழ்ப்பாணம், டிசெ.05

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரப் பணிகள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

வெள்ளம் தேங்கிநின்ற குடியிருப்புக் காணிகளில் வைகோல் கரைசல் விசிறல், பொதுக் கிணறுகள், பாடசாலைகள், அலுவலகங்கள், முன்பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள கிணறுகள் ஆகியவற்றுக்கு குளோரின் இடல், நீர் சுத்திகரிப்பு வில்லைகள் வீடு வீடாக வழங்கல், வெள்ளம் வடிந்த காணிகளில் நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருள்களை அப்புறப்படுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

இதேவேளை குடியிருப்புக் காணிகளில் உள்ள கிணறுகளுக்கு குளோரின் பவுடர் போடவுள்ளோர் தத்தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரி சோதகருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கான அடையாள அட்டைகள் செயலகத்துக்கு வந்துள்ளன

யாழ்ப்பாணம், டிசெ. 05

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் மூலம் க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் மாவட்டச் செயலகத்திற்கு நேற்று வந்து சேர்ந்துள்ளன.

பாடசாலை அதிபர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு இன்று முதல் மூன்று தினங்களில் வந்து அவற்றை நேரடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## தென்மராட்சியில் இலவச பாடநூல் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 05

தென்மராட்சி வலய பாடசாலைக் குரிய இலவச பாடநூல்கள் நாளை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் விநியோகிக்கப்படும். சகல பாடசாலை அதிபர்களும் அன்றைய தினம் பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (1-207)

## சங்கானையில் பட்டப் பகலில் தாலி அபகரிப்பு

சங்கானை, டிசெ. 05

வீதியில் தனியாக நடந்து சென்ற வயோதிபப் பெண்ணிடம் கழுத்தில் அணித்திருந்த தாலிக்கொடியை அறுத்து அபகரித்த சம்பவம் சங்கானையில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

காளி கோவில் வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி வடிவேலு தங்கரத்தினம் (வயது 75) என்பவர் வீதியால் வந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நிற்சாமம் போகும் பாதை எது என விசாரித்தனர்.

அத்தருணம் அவரது கழுத்திலிருந்த 10பவுண் நிறையுடைய 2 1/2 லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை, அபகரித்துக் கொண்டு அவர்கள் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-29)

## மரண அறிவித்தல்

### *சீதாலட்சுமி சிவசுந்தரம்*



அரியாலை, புங்கங்குளம் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சீதாலட்சுமி சிவசுந்தரம்(01.12.2008) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுந்தரத்தின் அன்பு மனைவியும், அமரர்களான கணபதிப்பிள்ளை- தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும், அமரர்களான சிவக்கொழுந்து - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், பாக்கியலட்சுமி, அமரர்களான மகேஸ்வரன், தனலட்சுமி மற்றும் கனகலிங்கம், உருத்திரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், றமேஸ்(நோர்வே), சுஜாதினி (நோர்வே), சுரேஸ்(மைந்தா-நோர்வே), சபேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறமிளா, யோகரட்ணம், சகிலா ஆகியோரின் அன்பு மாமியாரும், மிதுன், தபிதா, நிலான்ஜன், கல்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்ற (05.12.2008) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 47, புங்கங்குளம் வீதி,*
*அரியாலை.*

தகவல் :
றமேஸ்
(மகன்- வசந்தன்- நோர்வே)

## யாழ்.ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 05

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்வார். (01)


**IECE** 121/அரசடிவீதி, கந்தர்மடம்

கல்வியாண்டு 2009

10ம் 12ம் திகதி காலை 6மணி முதல்
(பிரத்தியேக, குழு வகுப்புகள்)

தரம் 6 முதல் O/L வரை
பொதுஆங்கிலம் G.C.E A/L

ஆங்கிலம் - திரு க.ரமணதாசன்
தமிழ் - திரு அ.நவநீதகிருஷ்ணன்
கணிதம் - திரு க.நிரஞ்சன்
ICT/GIT - திரு சி.பிரணவன்
திருமதி ர.அனுஷா
விஞ்ஞானம் - பிரபல ஆசிரியர்


### வலிமேற்கில் ஐவர் கிராம சேவையாளராக நியமானம் பெற்றனர்

வலி.மேற்கு சங்கானைப் பிரதேசசெயலர்பிரிவில் ஐவர் கிராம சேவையாளர்களாக நியமனம்பெற்றுள்ளனர்.

நியமனம் பெற்றவர்களை யாழ். செயலகத்தில் நடைபெற்று வரும் பயிற்சி நெறிக்குசமுகம்அளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

நியமனம் பெறுபவர்களின் விவரம் வருமாறு:-

என்.சிவரூபன்- சுழிபுரம்மத்தி, வி.எஸ் அசோ கரத்தினம்- டச் றோட், மூளாய், எஸ்.சிவகுமார்- மூளாய் தெற்கு, ரி.சுபேஸ்- அராலி வீதி, சங்கானை, பி.பிரதீபா- வழக்கம்பரை, தொல்புரம்.

## இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகர் திருச்செல்வம் பாராட்டுப் பெற்றுள்ளார்



*ஸ்ரீலங்கா நூலகசேவை இளைப் பாறிய உள்ளூராட்சிநூலகர்திரு.ஏ.எஸ். எஸ்.திருச்செல்வத்தின் கல்வி, சமய, கலை, கலாசார, சமூக சேவைகளை கௌரவித்து பருத்தித்துறை பிரதேச கலாசார பேரவையின் முத்தமிழ் விழாவிலே யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் தேசிய சமூக சேவைக்கான உயர் விருதை வழங்கிக் கௌரவித்துள்ளார். சமூக சேவையாளர் திரு.திருச்செல்வத்தின் சேவைகள் மேலும் சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

நெல்லியடி. (சி/556004)

மு.சுந்தரலிங்கம், சி.அகிலதாஸ், சி.தங்கராசா,
நெல்லியடி வர்த்தக நண்பர்கள்.

## சைவசமய விவகாரக் குழுவின் முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 06.12.2008ஆம் திகதி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சமய அறிவுப் பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் இடம்பெற ஏற்பாடாகியுள்ள சமய அறிவுப் பரீட்சையில் 12ஆம் மற்றும் 13ஆம் தரங்களைச் சேர்ந்த மாணவர்களது பரீட்சை 07.12.2008 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். ஏனைய தரங்களுக்கான பரீட்சைகள் திட்டமிட்டவாறு 06.12.2008 ஆம்திகதி நடைபெறும்.

06.12.2008 ஆம் திகதியன்று 12 ஆம், 13ஆம் தரங்களைச் சேர்ந்த மாணவர்கள் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகவே மேற்படி திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சிரமங்களுக்காக வருந்துகின்றோம்.

**மு.செ.சரவணபவ**
*தலைவர்*
சைவசமய விவகாரக் குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

## வரவேற்கின்றோம்



வானமுயர்ந்து சாதனைகள் படைத்த
மத்தியின் வளர்ச்சியில்
பின்னடைவு காணாது வளர்த்த
வண. டி. பி. நைல்ஸ் முதல் க.இராசதுரை
வரையான அதிபர்கள் வரிசையில் மத்தியின்
வளர்ச்சிக்குப் புதிய சரித்திரம் படைக்க
கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ
நியமனத்துடன் இன்று அதிபராக பதவி ஏற்கும்

**திரு. இ. ஓங்காரமூர்த்தி**
*B.A. Dip.in.Ed., S.L.P.S.1*
அவர்களை
வருக வருக என வரவேற்கின்றோம்.

கல்விச்சமூகம்
யாழ்.மத்திய கல்லூரி

**இன்று பதவி ஏற்கும் புதிய அதிபரை வரவேற்பதற்காக கல்லூரி அபிமானிகள் அனைவரும் காலை 8.00 மணிக்கு கல்லூரி வாயிலில் ஒன்று கூடுவோமாக.**

## ஈராண்டு இரு விழிநீருடன்



**தோற்றம்:** *22.11.1978*

**மறைவு:** *27.11.2006*

அமரர் செல்வி
சுதர்சினி நாகலிங்கம்
(சுதா - 1ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

*திதி:*
*சப்தமி 05.12.2008*


*ஈராண்டு காலம் ஓடி மறைந்ததே!*
*ஒளியாகி நின்ற எங்கள் செல்வமே*
*சீராண்ட உன்னைப் பிரிந்தே*
*தவிக்கின்றோம்*
*சிந்தையில் என்றும் இருப்பாய் நீ அம்மா!*

இல: 16, கஸ்தூரியார் வீதி,
1ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

**உங்கள் பிரி[illegible]**
**குடும்பத்தினர்.**

## ஆறாம் மாத நினைவலைகள்

மண்ணுலகில்
19 . 01 . 1939



விண்ணுலகில்
28 . 05 . 2008

முன்னாள் யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர்
**துரையப்பா வைத்திலிங்கம்**

அன்பு சொரிந்தெம்மை ஆட்கொண்டாய்; ஐயா நீ
சென்ற இடமெல்லாம் சேவை சிறப்பாகச்
செய்தாய்; எவரும் இனிய மனிதனென
கையெடுக்கு வண்ணம் பெருவாழ்வு வாழ்ந்து சென்றாய்!
ஆறு திங்கள் ஆனாலும் ஆண்டுபல ஆனாலும்
நீறணிந்த நெற்றியும் நீயுதிர்க்கும் புன்னகையும்
உள்ளத் திருக்கும்; உரைத்த இனியமொழி
தெள்ளத் தெளிவாய்ச் செவிகளிலே தேன்பாய்ச்சும்!

கலைச் சோலை
சாவகச் ஒழுங்கை, கோக்குவில்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
மாமி, மைத்துனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகள் சேதமடைந்தால் என்ன? எங்களுக்குள் ஓட்டப் போட்டிதான்

## தீவுப் பகுதியில் வாகனங்களுக்கிடையில் நடக்கின்றதாம்

நெடுந்தீவு, டிசெ.5

வீதிகள் புயல், மழை, வெள்ளம் என்பவற்றால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட போதும் வாகனங்களுக்கிடையிலான ஓட்டப் போட்டிகள் மும்முரமாக இடம்பெறுவதை தீவுப்பகுதியில் காணக் கூடியதாக உள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற மழையினால் பண்ணைப்பாலம் முதல் தீவுப் பகுதியின் முக்கிய வீதிகள் வரை சேதத்திற்குள்ளாகியுள்ளமை தெரிந்ததே. இந்த வீதிகளில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் தமது சேவையைத் தொடர முடியாதென ஒதுங்கிக்கொண்ட நிலையில் தனியார் பஸ்கள் தமது வழமையான சேவையை ஆரம்பித்துள்ளன.

போக்குவரத்துக்கள் சீராக இல்லை என்பதால் பஸ்தரிப்பிடங்களிலும் வீதியோரங்களிலும் பயணிப்பதற்காகக் காத்து நிற்கும் மக்களை எப்படியாவது தமது வாகனங்களில் ஏற்றிக்கொண்டுவிட வேண்டும் என்பதற்காக வீதியின் தன்மையைப் பற்றிக் கவலைப்படாது மிதமிஞ்சிய வேகத்தில் வாகனங்களைச் செலுத்தி வருகின்றனர். மிதிபலகையில்கூட காலை வைத்திருக்க முடியாத நிலையில் பயணிகளை ஏற்றுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

(202-111)

# புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் உடன் கடமைப் பொறுப்புகளை ஏற்க அறிவுறுத்து

## தவறின் நியமனம் ரத்துச் செய்யப்படும் என்கிறது கல்வி அமைச்சு

அச்சுவேலி, டிசெ.5

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர் ஆளணியைக் கருத்தில் கொண்டு நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்பட்ட பாடசாலைகளில் உரியகாலத்தில் பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்பட்டு பட்டியலில் அடுத்த நிலையில் உள்ளவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

புதிய பட்டதாரி ஆசிரியர்களுக்கு எந்த விதமான அடிப்படையிலும் தற்காலிக இணைப்பு வழங்கப்படமாட்டாது.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர் நியமனம் தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணப் பாடசாலைகள் தேவை மற்றும் பாடத்துறையின் தேவையைக் கருத்தில் கொண்டு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான பாடசாலைகள் அவர்களது விருப்புரிமையின்படி வழங்கப்பட்டுள்ளன.

பட்டதாரி ஆசிரியர் நியமனம்பெற்றவர்கள் குறித்து ஒதுக்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ள பாடசாலைகளில் நியமனங்களை உரிய காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளவேண்டும். அது தொடர்பாக வலயக்கல்விப் பணிப்பாளருக்கூடாக மாகாணக் கல்வி அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும்.

மேற்படி பட்டதாரி ஆசிரியர்களுக்கு தற்காலிக இணைப்புக்கள் எந்த வகையிலும் வழங்கப்படமாட்டாது. அதனை எதிர்பார்த்துச் செய்யப்படும் மேன்முறையீடுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது - என்றார். (மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)

(202-11)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கென இணையத்தளம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கென இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களின் அனுசரணையுடன் www.jncoe.net என்னும் முகவரியில் இந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்ளகப் பயிற்சியை மேற்கொண்ட 7ஆம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான கல்வி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்விலேயே இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கல்லூரியின் பீடாதிபதி கூறியவை வருமாறு: தொழில்நுட்பத் தகவல் உலகில் புத்தகங்களாக வெளிவருவதைவிட இவ்வாறான இணையத்தளம் மூலமாக விடயங்கள் பரிமாற்றம் செய்யப்படுதல் சகலருக்கும் நன்மை பயப்பதாகவும் விரைவானதாகவும் இருக்க முடியும்.

எமது கல்லூரியின் ஆசிரிய மாணவர்களின் மற்றும் விரிவுரையாளர்களின் ஆக்கங்கள் அனைத்து ஆசிரியர்களுக்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கும் எனவும் இத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிச் செயற்பாடுகளை உடனுக்குடன் பார்வையிடவும் முடியும் எனக் குறிப்பிட்டார்.

(204)

# நிகழ்வுகள்

கோப்பாய், டிசெ.5

யாழ்ப்பாணக் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்தும் உலக வலுவிழந்தோர் தின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் இந்துத் தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.இரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(202-72)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.5

வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் 38ஆவது வருடாந்த ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும், பிரிவுபசார விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவர் ஆசீர்வாதம் யோன்சன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ்.மாநகரசபை ஆணை யாளர் மு.செ.சரவணபவ, யாழ்.மாநகர சபை சுகாதாரப் பொறுப்பதிகாரி கு.கதிர் காமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(202-236)

* * *

நவாலி, டிசெ.5

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் ஒளி விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அருட்தந்தை விஜிந்தன் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக அருட்தந்தை மொலிஸ் அடிகளார், போதகர் ஷாம் ராஜசூரியர் ஆகியோரும் கௌரவ விருந்தினராக மானிப்பாய் திருக்குடும்ப கன்னியர் மடம் அருட்சகோதரிகளும் பங்குபற்றுவர். (202-100)

# யாழ்.மாநகர எல்லைக்குள் உள்ள வீதிகளில் தேங்கிய குப்பைகளை அகற்றும் பணி தீவிரம்

நல்லூர், டிசெ.5

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் முக்கிய வீதிகள் முதல் சிறிய வீதிகள் வரை தேங்கிக் கிடக்கும் குப்பைகளை அகற்றும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

நகரில் உள்ள குப்பைகளை அகற்ற 9 வாகனங்கள் வரை பயன்படுத்தப்படுகின்றன. குப்பைகளை முற்றுமுழுதாக அகற்றிவிட குறைந்தது இரண்டு வாரங்களாவது தேவைப்படலாம் எனக் கருதும் போதும் மிகக் குறைந்த நாள்களுக்குள் அவற்றை அகற்றிவிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

யாழ்.நகர கடைத் தெருவீதிகளில் தேங்கிக் கிடந்த குப்பைகளை முற்றாக அகற்றிய பின்னரும் அந்த இடங்களில் குப்பைகளைப் போடுவதாக கவலை தெரிவித்தார் ஆணையாளர்.

தற்சமயம் ஏற்பட்ட வெள்ளம் வடிவதில் ஏற்பட்ட தடங்கள் காணரமாக அனேக வீடுகளுள் வெள்ளம் புகுந்து மக்களுக்கு பலத்த சிரமங்களை உண்டு பண்ணியது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். குப்பைகளை வீதிகளிலும் வாய்க்கால்களிலும் போடுவதைத் தவிர்த்து வெள்ள அபாயங்களில் இருந்து குறைந்த அளவிலாவது விடுபடக் கூடியதாக மாநகரசபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஆணையாளர் சரவணபவ பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார்.

(202-111)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### மின்சக்தியைக் கட்டுப்படுத்த மின்குமிழ்கள் வழங்கல்

நல்லூர், டிசெ.5

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையம் தனது பகுதியில் உள்ள மின்பாவனையாளர்கள் மின் சக்தியைக் கட்டுப்படுத்தக் கூடியதாக 250 சக்தி சேமிப்பு மின் குமிழ்களை வழங்கியுள்ளது.

மானிப்பாய் சுந்தர்சன் நிறுவனத்தின் உதவியுடன் இந்த மின் சேமிப்புக் குமிழ்கள் வழங்கப்பட்டுள்ளதாக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (204-111)

### சமய சந்நிதியில்...

கோப்பாய், டிசெ.5

கோப்பாய் மத்தி வேளை அடப்பந்தாழி வைரவர் ஆலய வருடாந்த அபிஷேக அன்னதானப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

காலை அபிஷேக நிகழ்வும் பகல் அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (202-72)

### தொழிற்பயிற்சிகள்

நல்லூர், டிசெ.5

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீளளிப்புத் திட்டத்தின் கீழ் மேசன், தச்சுவேலைகளுக்கான தொழிற்பயிற்சிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை அரியாலையில் குழாய்கள் பொருத்துவதற்கான பயிற்சி நெறிகள் இடம்பெறும் எனவும் யாழ்.வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீளளிப்பு திட்டப் பிரிவு தெரிவித்தது.

மேசன், தச்சுத் தொழிலில் பயிற்சி பெற்றவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் உதவும் வகையில் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

தற்போது சாவகச்சேரி பிரதேச செயலகத்தை உள்ளடக்கிய பிரிவுகளில் இருந்து 25 பேர் தச்சுத் தொழில் பயிற்சிகள் பெற்று வருகின்றனர். (202-111)

### யாழ்.நகரில் பல வருடங்களாக மூடப்பட்டிருந்த

# ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி என்பன நேற்று மக்கள் பாவனைக்கு விடப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ்.ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் இருந்து யாழ்.செயலகத்துக்குச் செல்லும் பிரதான வீதியும், ஆரியகுளத்திற்குச் செல்லும் பலாலி வீதியும் மக்கள் பாவனைக்கென நேற்றுக் காலை முதல் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக மக்கள் பாவனை இன்றி மூடப்பட்டு இருந்த இந்த வீதிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் நேற்றுமுதல் இவ்வீதியூடான பயணங்களை மேற்கொண்டனர்.

அத்துடன் இவ்வீதியில் இருந்த வர்த்தக நிலையங்களும் நேற்றுத் திறக்கப்பட்டு துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்றன. (202-224)

# கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு வெள்ளம், புயலால் பெருநட்டம்

மந்திகை, டிசெ.5

அண்மையில் ஏற்பட்ட அடைமழை, புயலினால் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு பெரு நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதிபர் வி.சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பாடசாலையின் இருமாடிக்கட்டடங்கள், ஆசிரியர் ஓய்வு அறை, அதிபர் அலுவலகம், சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் நிறுத்தும் கொட்டகை என்பன பலத்த சேதமடைந்துள்ளன.

நூலகத்திலிருந்த கணனி, தொலைக்காட்சி, வானொலி, ... ஒளி நாடாக்கள், ... றாகப் பாவிக்கமுடியாத நிலையில் சேதமடைந்துள்ளன.

வித்தியாலய வளவில் நின்ற வேம்பு, மலைவேம்பு, தேக்கு ஆகிய நிழல்தரு மரங்களும் பல பயன்தரு மரங்களும் முறிந்தும் வேரோடு சரிந்தும் காணப்படுகின்றன.

இதேவேளை பருத்தித்துறை அவ்வொல்லை விநாயகராலயத்தில் நின்ற சுமார் - 200 வருடங்கள் பழமை வாய்ந்த அரசு, வேப்ப மரங்கள் விழுந்தமையால் ஆலயத்திற்கு சுமார் 10 இலட்சம் ரூபா ... ஆலய நிர்வாகம் ... (202-218)

### அனர்த்த முகாமைத்துவ பயிற்சிப் பட்டறை

சித்தங்கேணி, டிசெ.5

வலி.மேற்கு, வலி.தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்டவர்களுக்கென அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான ஒருநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஐ.ஓ.எம்.நிறுவனத்தினால் வலி.மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது இப் பயிற்சிப் பட்டறையில் சமூக சேவையில் ஆர்வமுள்ள 100 இளைஞர், யுவதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (202-112)

### அனலைதீவு ப.நோ.கூ. சங்கத்தில் மண்எண்ணெய் போதியளவு கையிருப்பில்

யாழ்ப்பாணம், டிசெ.5

அனலைதீவு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் மண்எண்ணெய் போதியளவு கையிருப்பில் இருப்பதாக சங்கத்தின் பொது முகாமையாளர் உதயனுக்கு தெரிவித்தார்.

பாவனையாளர்களின் வசதி கருதி சங்கம் ஒவ்வொருவருக்கும் 10 லீற்றருக்கு மேற்படாமல் மண்எண்ணெய் விநியோகித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(202-224)

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி

கோப்பாய், டிசெ.5

யாழ்.கல்வி வலயப் பிரிவில் இவ்வருடம் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் வெள்ள அனர்த்தத்தால் கடுமையாக பாதிப்புற்ற மாணவர்களுக்கு சோ.ஆ, சிறுவர் பாதுகாப்பு நிதியம் நிறுவனங்கள் ஆகியவற்றின் அனுசரணையோடு பல்வேறு பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடநூல்கள், எழுதுகருவிகள், கணித உபகரணப்பெட்டி, சீருடைகள், விளக்கு, செருப்பு, மண்எண்ணெய் ஆகிய பொருள்களே வழங்கப்பட்டுள்ளன. (202-72)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

அமிர்தலிங்கம் நிர்மலராஜ் என்பவரது கடவுச்சீட்டும் [இல-N1686512] மற்றும் உடுபுடைவைகளும் உள்ளடங்கிய பச்சைநிற பயணப்பை ஒன்று கடந்த திங்கட்கிழமை [01.12.2008] திருகோணமலை- தெல்லிப்பழைக்கிடையிலான கப்பற் பயணத்தின் போது தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 077 9184369, 077 6701606, 021 2226582.

குறிப்பு:- தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**"குகன் ஸ்ரோர்ஸ்"**

180, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (80447)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 31 . 07 . 1947



மறைவு 05 . 11 . 2008

### திருமதி பாலசுப்பிரமணியம் சோதிமலர்


ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம்
நொந்து, சீராட்டி பாராட்டி வளர்த்து பெரும்
புகழ்பெற்ற தாயே! உன் புகழும்
உன் நினைவும் என்றும் மனதில் நீங்கா.

நெல்லொருபாதி,
பிள்ளையார் கோயிலடி,
தாவடி தெற்கு. (80446)

குடும்பத்தினர்
(செ.செல்வராசா).

## ஏழாம் ஆண்டு நினைவு

பூமித்தாய் மடியில் 20 . 08 . 1923



பூமித்தாய் அடியில் 23 . 11 . 2001

### அமரர் முத்தையா சதானந்தன் (ஓதுவார்)

(ஓய்வுபெற்ற ஆசிரியர், கற்கோவளம்)


எம் குடும்பத்தின் ஒளி விளக்கே- உன்
கள்ளமில்லா வெள்ளை உருவம் தான்
மறக்க முடியுமா? உங்கள் இனிய குரல்
என்றும் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

கற்கோவளம்,
பருத்தித்துறை. (சி/555856)

மனைவி
குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 . 03 . 1932



உதிர்வு 19 . 11 . 2004

### அமரர் வல்லிபுரம் கிருஷ்ணசாமி


(உரிமையாளர், விநாயகா மோட்டார் வேக்ஸ்
மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி)

திதி: பூர்வ பட்ச அட்டமி (05.12.2008 வெள்ளிக்கிழமை)

ஆண்டுகள் நான்கு சென்றாலும் மாண்ட துயர் மாறவில்லை
தாண்டி விட்ட எம் வாழ்வில் ஊன்றும் கோலாய் இருந்தவரே!
வேண்டுகின்றோம் எம் எழு பிறப்பும் தந்தையாக
மீண்டும் அருள் சுடர்கவென ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

தற்காலிக முகவரி:
"கோகுலம்",
காளி கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (80445)

குடும்பத்தினர்.



இராணுவத்தினர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிய நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்: இராணுவத் தரப்பு)

# வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு இராணுவத்தினர் உணவு, உடை உதவி

யாழ்ப்பாணம், டிசெ.5

அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் 'நிஷா' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினர் சமைத்த உணவு, உடைகள் என்பவற்றை வழங்கினர். மருத்துவ முகாமையும் நடத்தினர்.

இது தொடர்பாக படைத்தரப்பினர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

அண்மையில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையடுத்து பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான மக்களுக்கு உடனடியாகவே நிவாரணப் பணிகளை மேற்கொண்ட இராணுவத்தினர் பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றனர்.

வெள்ளம் காரணமாக குருநகர் மற்றும் பாஷையூர் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றமை, அவர்களுக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக சிவில் நிறுவனங்களது ஒத்துழைப்பபைப் பெற்றுச் சமைத்த உணவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கை என்பவை யாழ். மக்களின் பாராட்டைப் பெற்றது.

பாரிய மரங்கள் வேருடன் சாய்ந்து பாதைக்குக் குறுக்காக விழுந்திருந்தமையினால் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்படுவதையும் மின்சாரம் தடைப்படுவதையும் கருத்தில் கொண்டு அன்றைய இரவே இராணுவத்தினரால் மரங்கள் வெட்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டன. அத்துடன் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பொருள்களையும், உடுபுடைவைகளையும் தம்மால் இயன்ற வரை வழங்கினர்.

மேலும் வெள்ளம் காரணமாக தமது வீடுகளை விட்டு வெளியேறி தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு இராணுவத்தினர் தமது உணவின் ஒரு பங்கை வழங்கி வருவதுடன் மருத்துவ முகாம்களையும் நடத்தி வருகின்றனர்.

## சங்கானைப் பொதுநூலகம் தற்காலிக இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.05

வலி.மேற்குப் பிரதேச சபையின் கீழ் இயங்கிவரும் சங்கானையில் அமைந்துள்ள பொது நூலகம் கடந்த ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் நிகரை வீதி, சங்கானையில் (சங்கானை நிகரை வைரவ ஆலயத்திலற்கருகில்) தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சுமார் ஒன்பது லட்சம் ரூபாவில் புதிதாக ஓர் இரண்டு மாடிக்கட்டமாக பொதுநூலகம் பழைய கட்டடத்தை இடித்துக் கட்டப்படவுள்ளது எனப் பிரதேச சபை அதிகாரி தெரிவித்துள்ளார். (204-29)

## சுன்னாகம் கிழக்கில் இலவச மருத்துவ முகாம்

நல்லூர், டிசெ.05

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் குழந்தை வைத்திய நிபுணர் க.சிவகுமார் உட்பட யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் கலந்து கொள்வார்கள். (204-111)

## உலக வலுவிழந்தோர் தின விழா

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ்.கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்தும் உலக வலுவிழந்தோர் தின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நல்லூர் இந்துத் தமிழ் பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.இரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204)

## தவறிவிட்டது

குடமியன், வரணி என்னும் முகவரியுடைய அனுசா சின்னையா என்பவரது தே.அ. அட்டை இல. (856804224V) தவறிவிட்டது. [கடந்த 21.11.2008 வெள்ளிக்கிழமை, சாவகச்சேரி இலங்கை வங்கிக்கும் வீ.எம்.கே. நகைக்கடைக்கும் இடையில்] கண்டெடுத்தவர்கள் "காளி கோயில் வீதி, அம்பாள் சலூன், கொடிகாமம்" என்னும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைத்து உதவவும். (80443)

## விற்பனைக்கு

★ நகைக்கடைகள், காட்சியகங்களுக்கேற்ற சிறந்த நிலையிலுள்ள அலுமினியம் பிற்றிங் கண்ணாடிகளுடனும், தன்னியக்க கதவுகள் 05 உள்ளடங்கலாக உடனடி விற்பனைக்குண்டு.

★ TOYOTA COROLLA DX, 14-XXXX தொடரிலக்க வெள்ளைநிற கார் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

(80418)

## ஓராண்டு நினைவலைகள்



மலர்வு: 10.08.1920

உதிர்வு: 17.11.2007

திதி: அட்டமி
(05.12.2008)

### திருமதி இளையபிள்ளை சங்கரப்பிள்ளை

அன்பின் திருவுருவே! பாசத்தின் உறைவிடமே!
ஆண்டொன்று சென்றதம்மா!
ஆறவில்லை எங்கள் மனம்
இருபத்தோராம் நாள்
பாசத் தம்பியையும் கொண்டு சென்றீர்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகப்
பெருமானை வேண்டுகின்றோம்.

மானிப்பாய். (80429)

குடும்பத்தினர்.

## இதயம் மறவா மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
07.08.1932

உதிர்வு
08.12.2005

திதி: பூர்வ பட்ச அட்டமி
(05.12.2008 வெள்ளிக்கிழமை)



### திருமதி இரசரத்தினம் பாக்கியம்

அன்புடனும் பாசத்துடனும் எங்களை வளர்த்த அம்மாவே!
எங்கள் வீட்டு ஒளி விளக்கே! எங்கு சென்றீர் எம்மை விட்டு
இனி என்று காண்போம் உங்கள் திருமுகத்தை நீங்கள் மறைந்தாலும்
உங்கள் திருமுக நினைவுகள் ஒரு போதும் எம்மை விட்டு நீங்காது
ஆயிரம் உறவுகள் வந்தாலும்அம்மா உங்களுக்கு நிகராகுமா?

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
"மலர் வாசம்",
மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.
(80440)

தற்காலிக முகவரி:
இல.43எ, சிவப்பிரகாசம் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரை மாறிய அமைச்சர்!

கொழும்பு,டிசெ.5

அமைச்சர் ஹேமகுமார நாணயகார நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அமரக்கூடாத, பிரதமரின் ஆசனத்தில் நேற்று முன்தினம் தவறுதலாக அமர்ந்துவிட்டார்.

இதை அவதானித்த சுகாதார அமைச்சரும் சபை முதல்வருமான நிமால் ஸ்ரீபால டி சில்வா அவரை உடன் இழுத்து வேறொரு ஆசனத்தில் அமரவைத்தார்.

நாடாளுமன்றில் வரவு - செலவுத்திட்டத்தின் சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நடந்துகொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம்பெற்றது.

அமைச்சர் ஹேமகுமார நாணயகார சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வாவுடன் ஏதோ பேசுவதற்காக நிமால் ஸ்ரீபால டி சில்வாவின் அருகில் வந்தார்.

நிமால் ஸ்ரீபால டி சில்வாவின் அருகில் உள்ள பிரதமரின் ஆசனத்தில் திடீரென அமர்ந்தார். இதை அவதானித்த நிமால் ஸ்ரீபால டி சில்வா உடனடியாகக் கையைப் பிடித்து அவரை எழுப்பிவிட்டார்.

தவறுதலாக பிரதமரின் ஆசனத்தில் அமர்ந்ததை உணர்ந்த ஹேமகுமார நெற்றியில் அடித்துக்கொண்டு மறு ஆசனத்தில் ஓடிவந்து அமர்ந்தார்.

பிரதமரின் ஆசனத்தில் பிரதமரும் ஜனாதிபதியும் மாத்திரமே அமர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)




வடமாகாண புற்று நோய் எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்தினர் அண்மையில் புற்று நோயாளர்களுக்கு உடுபுடவைகளை அன்பளிப்பாக வழங்கினர்.

நலன்விரும்பிகள், ஒரு சில புடைவை வியாபாரிகள் ஆகியோரின் உதவியுடன் இந்த அன்பளிப்புகளை வழங்கினர்.

சங்கத்தின் உபதலைவர் த.கனகசபை நோயாளி ஒருவருக்கு புடைவை வழங்குகின்றார்.

# குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தால் ஒளிவிழாவை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ.5

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன் னணி நடத்தும் 'ஒளிவிழா -2008' கலை நிகழ்வுகள் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு குருநகர் திறந்த வெளி கலையரங்கில் நடைபெற வுள்ளது.

இந்த விழாவை ஒட்டி நடத்தப்படும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக் கான பரிசளிப்பு, கலைஞர் கௌரவிப்பு, மற்றும் கலைநிகழ்வுகள் ஆகியன இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வை முன்னிட்டு நேரடியாக நடத்தப்படும் போட்டிகளும் நடைபெறவிருக்கும் நாள் மற்றும் நேர விவரங்கள் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியால் அறி விக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கட்டுரை எழுத்துப் போட்டியும் பிற்பகல் 3 மணிக்கு கவிதை எழுத்துப் போட்டியும் சென்ஜேம்ஸ் ஆலயப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

12ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பேச்சுப் போட்டியும் பிற்பகல் 2 மணிக்கு சென்ஜேம்ஸ் ஆலய மண்டபத்தில் நடைபெறும். அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு தனிநடனப் போட்டியும் பிற்பகல் 4 மணிக்கு குழுநடனப் போட்டியும் குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

13ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாலர் நடனம், பிற்பகல் 2 மணிக்கு நாடகம் ஆகிய போட்டிகள் குருநகர் கலா சார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கர்லை 9 மணிக்கு மறைக்கல்விப் போட்டி சென். ஜேம்ஸ் ஆலயப் பாடசாலையிலும், கூத்துப் பாடற் போட்டி பி.ப.3மணிக்கு மேற்படி பாடசாலை ஆலய மண்டபத்திலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(201-160)

# வலி.கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுள் 505 குடும்பங்கள் தொடர்ந்தும் முகாம்களில்

கோப்பாய்,டிசெ.5

வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத்தினால் பாதிப்புற்ற குடும்பங்கள் தொடர்ந்தும் 10 முகாம்களில் தங்கி உள்ளன. தற்போது 505 குடும்பங்களைச் சேர்ந்த 1754 பேர் முகாம்களில் தங்கி உள்ளனர்.

ஏற்கனவே 30 முகாம்கள் இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெள்ளநீர் படிப்படியாக வடிந்துள்ளமையினால் மக்கள் பலர் வீடுகளிற்குத் திரும்பியுள்ளனர். வீடுகள் முற்றாக அழிவடைந்தவர்களும் தாழ்ந்த நிலப்பிரதேச மக்களுமே இதுவரை திரும்பாமால் உள்ளனர்.

இதேவேளை இவர்களநக்கான உணவுப் பொருள்களை பிரதேச செயலக பிரிவினர் வழங்கி வருகின்றனர். உணவல்லாத பொருள்களை கெயர் அமைப்பு, 'டி.ஆர்.சி' அமைப்பு ஆகியன வழங்கியுள்ளன. டி.ஆர்.சி.அமைப்பினர் வாதரவத்தையில் உள்ள 248 பேருக்கு உப உணவுப் பொருள்கள், சவர்க்காரம், புளி போன்றவற்றை வழங்கி உள்ளனர்.

கெயர் அமைப்பினர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, ஊரெழு கணேசா வித்தியாலயம், வாதரவத்தை கிராம நலன் புரி நிலையம் ஆகியவற்றில் தங்கியுள்ளவர்களுக்கு உணவல்லாத பொருள்களை வழங்கியுள்ளனர். (202-72)

ஆசிரியர்கள், அரச ஊழியர்களின்

# விடுமுறைக்கால புகையிரத ஆணைச்சீட்டை சமர்ப்பித்து பயணக் கட்டணம் பெறலாம்

அச்சுவேலி, டிசெ.5

விமானமூலம் அல்லது கப்பல் மூலம் யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டத்துக்கு பயணம் செய்த அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் தமக்குரிய விடுமுறைக் கால புகையிரத ஆணைச் சீட்டை சமர்ப்பித்து பயணக் கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த வருடம் பயணம் செய்தவர்கள் தமது விண்ணப்பங்களை டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னதாக திணைக்களப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு விடுமுறைக் காலத்தில் பயணம் செய்வதற்கு மூன்று சோடி (சென்று - திரும்பிவர) புகையிரதச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து புகையிரத ஆணைச் சீட்டுக்களைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதால் புகையிரத ஆணைச் சீட்டுக்களை விமானப் பயணம் / கப்பல் பயணத்துக்குச் சமர்ப்பித்து அதற்குரிய கட்டணத்தை மீளப்பெறமுடியும்.

புகையிரத ஆணைச்சீட்டுக்களை சம்பந்தப்பட்ட அரசாங்க ஊழியர்கள் - ஆசிரியர்கள் தமக்கும் தன்னில் தங்கி வாழ்வோருக்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

தங்கி வாழ்வோர் என்ற வகையில் சட்டபூர்வமான கணவன் - மனைவி, விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய உரிமை கொண்ட பிள்ளைகள் மற்றும் உரிய முறையில் மேல் அனுமதி பெற்றுள்ள பெற்றோர் ஆகியோருக்கு புகையிரத ஆணைச்சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த வருடத்தில் பயணம் செய்தவர்கள் இந்த நிதியாண்டின் இறுதிப் பகுதியில் மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டுக்களையும் காங்கேசன்துறை - மாத்தறை வரை பயணத் தூரமாக சம்பந்தப்பட்ட வகுப்பு நிலைக்குரிய வசதிகளுடன் சமர்ப்பித்து கப்பல், விமான பயணத்துக்கான கட்டணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பான சுற்றறிக்கைகள் வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 2007ஆம் ஆண்டில் இருந்து இந்த நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(202-11)

# வலி.வடக்கு, தெற்கில் துரிதகதியில் மின்இணைப்புகள்

வலி.வடக்கு, டிசெ.5

வலி.வடக்கு வலி.தெற்குப் பகுதிகளில் மின்சார இணைப்புக்களை வழங்குவதில் மின்சாரசபை ஊழியர்கள் விரைவாக ஈடுபட்டு வருவதையிட்டு அப்பகுதி மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள்.

பகுதி பகுதியாக இந்த மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது மல்லாகம் அளவெட்டி தெல்லிப்பளை, ஏழாலைப் பகுதிகளுக்கு மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்துடன் வீதியின் குறுக்கே மரங்கள் வீழ்ந்து அறுந்த மின்வயர்களை இணைக்கும் பணிகளும் சரிந்த மின்தூண்களை நிமிர்த்தும் பணிகளும் மரங்களை வெட்டி அகற்றும் பணிகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. (202-86)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தொற்றுநோய் அபாயம்!

முல்லைத்தீவு, டிசெ.5

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் மக்களுக்கு தொற்று நோய் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மக்கள் வாந்திபேதி மற்றும் காய்ச்சலினால் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர் என்றும், அங்கு போதியளவு வைத்திய வசதி இன்மையே இதற்கு காரணம் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை வாந்திபேதி மற்றும் காய்ச்சலினால் பாதிப்படைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையிலும் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் என அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (சி)

# வடக்கு மாகாணத்தில் மேலும் 205 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க ஏற்பாடு

அச்சுவேலி,டிசெ.5

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பட்டதாரி ஆசிரியர் நியமனத் திட்டத்தின்படி மேலும் 205 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதமூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பாடசாலைகளின் தேவையைக் கருத்தில் கொண்டு நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர் நியமத் திட்டத்தின் கீழ் 2ஆம் கட்டமாக 205 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இவர்களும் மூன்றாம் தவணையில் பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்கும் வகையில் ஏற்புடை நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 387 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது.இரண்டாம் கட் டமாக 205 பேருக்குமாக எல்லாமாக 592 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(203-111)

# 'நிஷா'வின் பதிவுகளில் மேலும் சில....


நவாலி கிழக்கில் கடையொன்றின் நிலை




வேலணை மத்திய கல்லூரியின் சேதமடைந்த காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்
General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

## English Language &1

One hour

ஆக்கம் :- திரு.ஏ.பகீரதன், கொழும்பு வலயம்.

**Test - 01 Read the following description and complete the table given.** (Marks- 05)

Mr. Ranjan Samaraweera is a shop owner. His shop is half a kilometer away from his home. He walks to his shop. It takes him about 10 minutes to go to his shop.

Mr. Ramanayake is a clerk. His office is 3 1/2 kilometers away from his residence. He cycles to office. It takes him about 25 minutes to go to his office.

Mrs. Mangala Wickramasinghe is a teacher. Her school is 8 kilometers away from her residence. She goes to school by car. It takes her about 10 minutes to go to school.

| Name | Method of Transport | Distance to work | _ _ _ _ |
|---|---|---|---|
| Mrs.Mangala Wickramasinghe | _ _ _ _ | _ _ _ _ | _ _ _ _ |
| _ _ Minutes _ _ _ _ _ _ | _ _ _ _ | _ _ _ _ | 25 |
| Mr. Ranjan Ramanayake | _ _ _ _ | _ _ _ _ | _ _ _ _ |

**Test - 02 Fill in the blank using the words given in the box.** (Marks 05)

Of, during, to, from, in, by

The British came (1) .......................... Sri Lanka (2) .......................... the reign of Queen Victoria. As a result our country is also influenced (3) .......................... Victoria values. During the Victorian period, which takes its name (4) .......................... Queen Victoria, fiction, poetry, drama, music and other forms (5) .......................... Literature flourished (6) .......................... England. The influence of Victorian values was left in our country too.

**Test - 03 Select the appropriate words/ phrases from the list below and fill in the blanks of the dialogue.** (Marks- 05)

( I'm quite thirsty / come in / can I prepare you something to eat / Here you are / Thank you / I'm not hungry)

Nuwan : Hello. Ruwan what a surprise! (1) Come in.
Ruwan : (2) .................................. Nuwan.
Nuwan : Please, sit down. (3) ..................................?
Ruwan : No. Thanks (4) ..................................
Nuwan : Then would you like to drink something?
Ruwan : Yes. (5) ..................................
Nuwan : No wonder It's a very hot day. (6) ..................................!
Ruwan : Thanks Nuwan. I came to discuss something regarding our sports meet.

**Test - 04 Design a label for a home made pickle produced by you. Include the following.** (Marks- 05)

Trade name. Ingredients, date of manufacture, expiry date, price

**Test - 05 Read the following text and find the information.** (Marks- 05)

On April 26th 1564 a name was added to the register of the village Stratford - upon Avon in England as William Shakespeare. Nobody could foresee that this baby would be world famous as the greatest writer in the language.

"The Merchant of Venice" is one of the 38 plays written by William Shakespeare between the years 1598 & 1612.

1. Name : ..................................
2. Date of birth : ..................................
3. Village and country : ..................................
4. Famous for : ..................................
5. Number of plays and the name of a play : ..................................

**Test - 06 Imagine that your uncle gave you a computer on your 16th Birthday. Write five sentences about the activities you hope to do with it.** (Marks- 05)

**Test - 07 Read the following text written by Surangi and answer the questions given.** (Marks- 05)

Swaminathan ran down Grove Street, turned to his right, threaded his way through Abu Lane, stood before a low roofed, dingy house, and gave a low whistle. He waited for a second and repeated it. The door chain clanked, the door opened a little and Mani's head appeared and he said. "fool My aunt is here, don't come in. Go away and wait for me there.

Swaminathan moved away and waited under a tree. The sun was beating down fiercely. The street was almost deserted. A donkey was standing near a gutter. patiently watching its sharp shadow. A cow was munching a broad green plantain leaf. Mani sneaked out of his house.

1. Where did Swaminathan go ? ..................................
2. What did he do at the house ? ..................................
3. Who is the "fool" ? ..................................
4. Why didn't Mani come out of his house ? ..................................
5. What do you mean by "The street was almost deserted" ? ..................................

**PART - II** Time - 2 hours

**(Answer all question on this paper itself)**

**Test - 08**

Here are some useful practical tips for every life. Match them and write the correct number in the box. One is done for you.

a) There's a gas leak.
b) It is poisonous.
c) It'll melt.
d) There is thunder and lightning.
e) There are some germs in green leaves.
f) Children get hurt by playing with them.

1. Keep out of reach.
2. Store it at 5° or less.
3. Hide sharp tools.
4. Pull out all plugs
5. Wash them with mild salt water.
6. Don't check it with a candle or lighted match.

(Marks- 05)

**Test - 09**

**Complete the following dialogue. Use the phrases given in the box. First one is done for you.**

Amal :- Hello, Nadee Good morning!
Nadee:- (1) Good morning, Amal. Did you read today's newspaper?
Amal :- (2) .................................. Was there any thing special?
Nadde:- (3) ..................................
Amal :- (4) ..................................
Nadee:- It's a quiz competition. We need five friends with the knowledge in different fields
Amal:- (5) ..................................
Nadee:- Let's tell this to our English teacher. (6) ..................................
Amal:- There gose the bell. Let's met at the interval and discuss more.

a) How can we select them?
b) No, I was busy with my assignments.
c) She"ll help us.
d) Good morning.
e) A competition.
f) Yes there's a competition.

(Marks- 10)

**Test - 10**

**Read the following passage and the statements given** below.Compiete the statements by underlining the correct answer.

The influenza virus has been leading the scientists a merry chase for decades now.A microscepic quick change artist it comes in several different types,all of them subjiect to sudden,unpredictable altrations.So varied are the guises of theflu virus that last year's flu vaccine is some times totally useless against this year's model of the germ.

Keeping up with the flu virus is the job of a network of influenza centrss the W.H.O. has set up all over the world to actas listening posts. Whenever an epidemic breaks out,the virus responsible for it is isolated at the nearest influenza centre and is closely examined.If none of the avail able vaccine offers protection against is world of the new virus goes out to all the other influenza centres and samples of it are made a vailable to them.Tremendousefforts are made to produce a new vaccince be fore the virus has had achance to spreed too far.

The common cold is one virus disease that has so for stumped the vaccine markers.colds are caused not by one virus or evenone group of viruses,but by well over one hundred different ones.

One of the most recent vaccines to be developed is for German measles,also known as rubella.German measles is such a mild dis ease that here seemed little reason to have avaccine for it unit 1941,when astarting discovery wsa made.

1) The W.H.O.has so far failed to find a vaccine for
a) influenza.
b) the common cold
c) German measles.

2) A vsccine for German measles was not developed until re cently because

(Marks- 10)


**Test - 11**

Write on one of the following. Use about 100 words.
* A local festival we celebrate.
* Living in the future.
* I look after my grandma.

(Marks- 10)

**Test - 12**

**Look at the following flow - chart on how cake is made.**




Now write a descripton on how cake is made. Use the following expressions.
First, then, after this later, next, finally

**Test - 13**

**Read the following poem and answer the questions below.**

I meant to do my work today.
I meant to do my work today.
but a brown bird sang in the apple tree.
And a butterfly flitted across the field.
And all the leaves were calling me
And the wind went singing over the land.
Tossing the grasses to and fro.
And rainbow held out its shining hand
So what could I do, but laugh and go.

1) What was the speaker's intention? ..................................
2) Why could he not do it? ..................................
3) Write 2 things that attracted him ..................................
4) What did he finally do? Write the lines that show this. ..................................
5) Fill in the adjectives and their nouns from the poem. ..................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Adjective | Noun |
|---|---|
| a) .................. | tree |
| b) brown | ............... |
| c) .................. | ..................... |

(Marks- 10)

**Test - 14**

**Read the following text and answer the questions given below it.**

The heat of the 2008 Olympics is on! The excitement that has been stirred up in Chin: is gradually spreading throughout the world. The key event that has contributed to arouse this excitement is the Olympic Torch Relay.

Fire is a power which helped man to cook his food, keep him warm and get rid of the darkness. According to Greek mythology, fire has been discovered because the God Prometheus stole fire from Zeus and gave it to humans. This has been celebrated by Greek by having relay races where the athletes passed a lit torch to one another until the winner reached the finish line.

The first Olympic Games can be tracked back to 776 B.C., where the event was held once in every four years to honour Zeus and other Greek gods. The period of the Olympia was spent as a period of peace, and during this time the runners known as "haralds of peace" uesd to traval throughout Greece declaring a truce to all wars, and truce remained throughout the Olympics in order to make the event a success and provide safe passage to spectators The combination of these two occurences can be considered as the root of the modern Olympic torch relay.

The tradition continues and the flame is still lit at the temple of Hera in Olympia. Greece, as it had been done centuries ago. The Olympic torch is lit several months before the start of the actual Games in the same way it was done back then.

A priestess used to light the torch in ancient days. Therefore it is done these days too by having an actress dressed as a ceremonial priestess, in robes of the ancient Greeks. to light the torch using the same technique used in the original Games.

The torch relay in 2004 had visited all previous Olympic cities before returning to Athens. The torch relay of 2008 is scheduled to reach Mount Everest.

1) Where will the Olympics be held in 2008? ..........................................
2) What is the most important event Olympic Games? ..........................................
3) Write three uses of fire that are mentioned in the text? ..........................................
4) What was the aim of the ancient Olympic Games? ..........................................
5) Why was the truce followed throughout the Olympics?
6) Who lights the Olympic torch today? Give the phrase that says this ......................
7) Find the words for the following phrases from the text ..........................................
   a) an agreement to stop fighting ..........................................
   b) a female who performs religious ceremonies

(Marks-10)

**Test - 15**

**Write atleast 250 words on one of the following.**

1) A friend in need is a friend indeed
   * What is a friendship?
   * How can we build up a goos friendship?
   * The qualities of a good friend.
   * The benefits yo get from a good friend.

2) Write a legend connected with the betel leaf or any other folk thae you know.

3) "Telephone plays a major role in communication"
   a) Feel free to express your views.
   b) You may agree or disagree
   c) Other technologies e mail, SMS.

(Marks- 10)



யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற பெற்றோர் தின வைபத்தில் பிரதம விருந்தினரான சம்பத்திரிசியார் கல்லூரி ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர் திருமதி மேரி அஞ்சலா அல்போன்ஸ் மங்கள விளக்கேற்றுவதையும் அதிபர் சங். சகோதரி லடிஸ் லாஸ் மற்றும் உப அதிபர் சித்திரா ராஜரட்ணம், பாடசாலை ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர் சங்.சகோதரி மரியா சந்தியாப்பிள்ளை ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: த.பரமலிங்கம்)*



புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் மாணவியொருவருக்குப் பரிசில் வழங்குகிறார். *(278)*



பசுப்பால் வழங்கும் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முன்பள்ளிப் பிள்ளைகளுக்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்துப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பால் வழங்கி ஆரம்பித்து வைக்கிறார். *(படம்: நவாலிச் செய்தியாளர்)*



சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சிறுவர்களுக்குப் பால் வழங்கும் வேலைத்திட்டம் அண்மையில் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் நீர்வேலி பாலர் பகல் விடுதியில் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் பால் வழங்கி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் அத்தியார் இந்துக் கல்லூரி உப அதிபர் எஸ்.சிவராசா நிற்பதையும் படத்தில் காணலாம். *(72)*



மட்டுவில் தெற்கு கமலாசனி வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் வைபவத்தில் விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிக் கல்வி வலயத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வே.பாராளன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தனும், சிறப்பு விருந்தினர்களும், அதிபர், ஆசிரியர்களும் நிற்பதைக் காணலாம்.



உடுவில் மகளிர் கல்லூரியின் பெற்றோர் தின விழாவில் சிறுவர்களின் கலைநிகழ்வைப் படத்தில் காணலாம். *(படம்: மகா)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்ட போக்குவரத்துத் திணைக்களத்தில் 277 பேரின் வாகனப் பதிவுச் சான்றிதழ்கள், கடிதங்கள்

கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் பதிவுத்தபால் மூலம் வாகனப் பதிவுச் சான்றிதழ் மற்றும் உடைமை மாற்றம் தொடர்பான வாகனப் பரிசோதனைக் கடிதங்கள் என்பன வாகன உடைமையாளருக்கு அனுப்பப்பட்டிந்தன.

உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாத காணரத்தினால் தபாலில் விநியோகம் செய்யப்படாத வாகனப் பதிவுச் சான்றிதழ் மற்றும் வாகனப் பரிசோதனைக் கடிதங்கள் யாழ்.மாவட்டத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே, உரியவர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வாகன ஆவணங்களுடன் அலுவலக நாள்களில் நேரில் வந்து வாகனப் பதிவுச் சான்றிதழ் மற்றும் வாகனப் பரிசோதனை தொடர்பான கடிதங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளுமாறு உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

வாகனப் பதிவுச் சான்றிதழ்களுக்கு உரியவர்களின் பெயர் விவரம் வருமாறு:

பத்தினியகை சேவியர் (03 Sri 4895), நமசிவாயம் சிவகுமார் (07 Sri 7788), தர்மலிங்கம் தயாபரன் (203-2663), கதிரரேசு தங்கராஜா (203- 8119), ஐயாத்துரை குணரட்ணம் (21-7335), யோகராசா குஜெந்தன் (21-8122), கந்தசாமி குலேந்திரன் (21-8521), மரியதாஸ் யோகீஸ்வரன் (500-7707), செல்வராசா மயூரன் (87-9359) பாலச்சந்திரன் துஷியந்தன் (NP GX -8778).

சின்னப்பு பேரின்பநாயகம் (NP HQ -8127), நடராஜா ஜெயகாந்தன் (NP JQ-8183), சரவணமுத்து தவரட்ணம் (07-8214), அப்துல் ரகுமான் நசீர் (125- 4006), முத்துராசா நந்தன் (144-8961), காசிப்பிள்ளை சிவராஜா (145- 4035), சிவஞானவடிவேல் இராஜசேகர் (145-0496), தம்பன் ஞானசேகரம் (155- 8648), நடராசா நந்தகுமார் (500-0590), செல்லக்கண்டு ஜெகதீஸ்வரன் (500- 1428).

பாலசுப்பிரமணியம் பொன்னம்பலம் (500-1569), சிவசம்பு மோகனபதி (500-2547),சின்னப்பு அந்தோனி (500- 2670), ஐயாத்துரை விஜயராசா (500- 3282), செல்லத்துரை கோகிலன் (500- 9021), கோபாலகிருஷ்ணன் கிருபானந்தன் (84-5118), செல்வராசா கிருஷ்ணகுமார் (86 Sri 8226), சிவசிவபிள்ளை இரவீந்திரதாஸ் (NP GD- 5566), சிவசுப்பிரமணியம் யோகீஸ்வரன் (NP GF-6669), தெட்சணாமூர்த்தி சத்தியசங்கர் (NP GH-0046).

சபாரட்ணம் பிரகதீஸ்வரன் (NP GH-6104), ஐயாத்துரை சிவநேசன் (NP GL-9055), செல்வராஜா செல்வகுமார் (NP GO-6473), சின்னத்தம்பி இராசரத்தினம் (NP GO-6550), துரையப்பா சிறிதரன் (NP GP-8453), அருமைத்துரை சிவவிநாயகம் (NP GQ-2250), நாகமுத்தன் சுதாகரன் (NP GQ-2450), அரியராசா தவச்செல்வன் (NP GZ-0030), பூபாலன் தேவராசா (NP GZ-0249), செல்லத்துரை விமலேஸ்வரன் (NP HA-6108).

இராசலிங்கம் சுரேந்திரன் (NP HC -2575), சிறிஸ்கந்தராசா குகதர்சன் (NP HD-5428), சின்னத்துரை சதீஸ்குமார் (NP HM-4607), மரியதாஸ் வின்சலஸ் (NP JE-1521), பரமலிங்கம் கண்ணதாசன் (NP JZ-9345), வேலாயுதபிள்ளை தனகுமார் (NP MB-2851), வேலன் விஜயகுமார் (NP MF-5740), சுப்பிரமணியம் சுதானந்தன் (NP MR-0298), கண்ணையா யோகராசா (28 Sri 3389).

வாகன உடைமைமாற்றம் தொடர்பான உரியவர்களின் பெயர் விவரம் வருமாறு:

NPGV- 9127, NPGH- 6147, 150-8416, 500- 1304, 204- 2711, 41-7387, NPHN- 9061, NPJM- 7010, 501- 0145, NP HF- 7634, NP HN- 7417, 19- 4909,NP GQ- 2118, 41- 8699, NP HL- 7233, 500- 0360, 13-8097, 1-4085, 4-0633, 84-1762, NP MQ-2806, NP MM- 5960, 201- 4646, NP HB- 4865, NP GY- 9681, NP SB- 0611, NP MF- 8079, NP MH- 2954, NP QB- 8128, NP JD- 1727, 28-1214, NP TZ-9332, NP JE- 0347, NP MO- 3597.

NP HF- 4111, 130- 9186, 202- 0055, 500-5082, NP MQ - 1459, NP MS- 1067, NP HX-2981, NP HN-7426, 500- 4595, NP JY- 7102, NP HG- 2444, NP JX- 9580, NP HB- 5437, 207-1618, 251- 8646, NP JO- 2580, NP MC- 0024, NP MH- 2944.

NP HY- 7567, NP GQ- 2014, NP MC-7682, NP HK- 7354, NP GY- 6742, NP GT-4372, NP GH- 0118, NP HE-6901, NP JS-7029, 70-9505, 14- 3022, 500- 3863, 36-0634, 70- 8435, NP JB- 9028, 500- 6932, NP MC-9610, NP MC- 9718.

MP GH- 5966, 206- 6517, NP GH- 5988, NP GS- 6692, MP ME- 7762, 500- 8171, NP GN- 0219, 96- 7787, NP HB- 9139, NP GQ-9868, 30-9072, NP MU- 1963, 41-7638, 151-9127, 92- 4941, NP NG- 6673, NP JY- 8386, NP JE- 6011, 27- 6156, NP HJ- 8742.

24- 8639, NP GS- 4415, NP ME- 5645, NP MW- 3969, NP GC- 6486, 83- 5326, 500- 8773, NP MN- 8513, 500- 6794, 83-5326, 500- 2839, NP JU-7169, NP JY- 6718, NP JK- 4717, NP HZ- 6308, 500-8773.

71-7291, 136-151, 40-5016, 500-0487, NP HB-7515, 01- 3162, NP JK- 9869, NP HN- 5906, 54-3781, NP JR- 2268, 06- 4807, 205- 7227, 124- 1873, 05- 8306, 27-2863, 21- 8521, NP NA- 1842, NP MH- 5304, 500- 5510, 500- 5251, NP JO-1506, NP MC- 7040.

## தையல் பயிற்சிக்கு நேர்முகப் பரீட்சை

தென்மராட்சி, டிசெ.5

தென்மராட்சிப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்படவுள்ள தையல் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விண்ணப்பித்தவர்களுக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளதாகவும், கடிதங்கள் கிடைக்காதவர்களுக்கும் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (202- 207)

## தென்மராட்சியில் வெள்ளத்தால் அழிவுற்ற கால்நடைகளின் விவரம் சேகரிப்பு

தென்மராட்சி, டிசெ.5

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட 'நிஷா' புயல் மற்றும் வெள்ளம் ஆகியவற்றினால் பண்ணையாளர்களுக்கு ஏற்பட்ட கால்நடைகளின் அழிவு தொடர்பான விவரங்கள் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் பணிமனையனால் திரட்டப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் இழந்த கால்நடைகளின் விவரங்களை நாளை சனிக்கிழமை முன்னர் பணிமனையில் பதிவு செய்யுமாறு கால்நடை வைத்தியர் ஜி.இரகுநாதன் அறிவித்துள்ளார். (202- 207)

## வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் மழையினாலும் பாதிப்பு!

வவுனியா, டிசெ. 5

வன்னிப் பிரதேசத்தில் போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மழை வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டு பாடசாலைகள் மற்றும் பொதுஇடங்களில் தஞ்சம்புகுந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன எனக் கல்வித்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற மோதல்கள் காரணமாகப் புதிய இடங்களில் இருந்தும் பொதுமக்கள் இடம் பெயர்கின்றனர் என வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடப்பெயர்வு காரணமாகத் தொழில்களை இழந்துள்ள பலரும் அரசினால் வழங்கப்படுகின்ற நிவாரண உதவிகளிலேயே முழுமையாகத் தங்கியிருக்கின்றனர் எனவும், உணவு தவிர்ந்த ஏனைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குப் போதிய பொருளாதார வசதிகளின்றி அவர்கள் தவிக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)


யாழ்.நகரில் முதலாவது
முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்
Annai Nagaa Food City
நத்தார், புதுவருட தினங்களை முன்னிட்டு
அசத்தலான OFFERS
ஏராளம்... ஏராளம்...

- விலைக்கழிவுகள்
- அன்பளிப்புப் பொருள்கள்
- ஒன்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் இன்னொன்றை இலவசமாகப் பெறுங்கள்
- அதிக பொருள்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் சீட்டிழுப்பில் பங்குபற்றிப் பல பெறுமதி மிக்க பரிசில்களை வெல்ல முடியும்.
- இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

- சுத்தமாகப் பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்
- இறைச்சி / பொதி செய்யப்பட்ட இறைச்சி வகைகள்.
- பால்மா வகைகள் (கீல்ஸ் சொசேஜஸ் -Sausages)
- பழவகைகள், பழரசங்கள்,கேக் மற்றும் கேக் உள்ளீடுகள்.
- பலவகையான ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள், பிஸ்கட், வெளிநாட்டு சொக்கிளேற் வகைகள்.
- அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் வீட்டுப் பாவனைப் பொருள்கள்,
- சிகை அலங்காரப் பொருள்கள், வாசனைப் பொருள்கள் (சென்ற் வகைகள்)
- சீஸ், பட்டர், மாஜரின், குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடைகள்

Annai Nagaa Food City




மேலும் பல
இன்றே விரையுங்கள் நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம்.
தினசரி காலை 8.00 - மாலை 6.00 வரை திறந்திருக்கும்.
175, K.K.S. Road, Jaffna. T.P - 021-5515, 021-7875


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராவிடப் பின்னணி கொண்ட சிங்கள இனம் பல மக்கள் கூட்டங்களினதும் சேர்க்கை

கலாநிதி ஆ.க.மனோகரன் எழுதிய 'இலங்கைத் தேசிய இனமுரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகளும்'- ஒரு வரலாற்றுப் பார்வை 1948- 2007 என்ற நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நிகழ்த்திய வெளியீட்டுரையின் ஓர் அங்கம் நேற்றுப் பிரசுரமாகியிருந்தது. இன்னுமொரு பகுதி இது.


க.வி.விக்னேஸ்வரன்

அரச உத்தியோகபூர்வ அலுவலர்கள் பெரும்பான்மையாக அது காறும் இருந்து வந்த சட்டவாக்க மன்றத்தில் முதன் முறையாக உத்தியோகப்பற்றற்ற மக்கள் பிரதிநிதிகள் பெரும்பான்மையாகப் பதவி வகிக்க பிரித்தானிய அரசு சம்மதித்திருந்தது. அன்றைய சட்டவாக்க மன்றில் முழு இலங்கையையும் 37 அங்கத்தவர்களே பிரதிநிதிப்படுத்துபவர்களாக இருந்தனர். இவர்களுள் 16 ஆசனங்களில் மட்டுமே பிரதேசவாரியாக தேர்தல் மூலம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படவிருந்தனர். இந்தப் 16 ஆசனங்களில் ஒன்று தான் கொழும்பில் தமிழர்களுக்கென ஒதுக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டது. உண்மையில் 1921 ஆம் ஆண்டு வெளிவந்த அரசியல் யாப்பானது சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் படைப்பே என்று கூடக் கூறலாம். நாட்டை இன சௌஜன்யம் நோக்கி நடந்து செல்லத் தம்மால் முடிந்த அனைத்தையும் அவர் செய்தார்.

ஆனால் நடந்தது என்ன? குறிப்பாக சேனாநாயக்க சகோதரர்கள் சேர்ந்து அந்த ஆசனத்திற்கு சேர் ஜேம்ஸ் பீரிஸை போட்டியிட வைத்தார்கள். அதாவது தமிழர்க்கென ஒதுக்கப்பட்டிருந்த அந்த ஆசனத்திற்கு ஒரு சிங்களவரைப் போட்டியிடக் களத்தில் இறக்கினார்கள். அது மட்டுமல்ல. எழுத்து மூல உத்தரவாதம் கொடுத்த அதே சேர் ஜேம்ஸ் பீரிஸூம், ஈ.ஜே.சமரவிக்கிரமவும் உத்தரவாதம் கொடுக்கும்போது, வகித்த பதவிகள் வேறு; தற்பொழுது தாங்கள் வகிக்கும் பதவிகள் வேறு என்றார்கள். அதாவது முன்னர் சேர் ஜேம்ஸ் பீரீஸ் இலங்கைத் தேசிய சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றியபோது அந்த உத்தரவாதத்தை அளித்தார் என்றும், தற்பொழுது தாம் இலங்கை தேசியக் காங்கிரஸின் தலைவர் என்றும், முன்னைய உத்தரவாதம் தாம் தற்பொழுது வகிக்கும் பதவியைக் கட்டுப்படுத்தாது என்றும் மனம் கூசாமல் கூறினார்.

அது மட்டுமல்ல. இந்த ஏமாற்றுச் செயலைத் தமிழர்கள் எதிர்த்து பிரித்தானிய அரசுக்கு முறையிடப் போக, சிங்களப் பிரதேசம் அனைத்திலும் சிங்கள வேட்பாளர்களே சிங்கள மக்களால் பெயர் குறிப்பிடப்பட வேண்டும் என்றும் கூறினார்கள்.

அதுமட்டுமல்ல. மிக முக்கியமான ஒரு காரணத்தையும்வெளியிட்டுத் தமிழர்களுக்குக் கொழும்பில் ஆசனம் எதுவும் கொடுக்கத் தேவையில்லை என்றார்கள். என்ன காரணம் என்று நினைக்கிறீர்களா? இலங்கைத் தமிழர்கள் மற்றவர்கள் போல் சிறுபான்மை இனத்தவர்கள் அல்ல. அவர்களும் அவர்கள் வாழும் இடங்களில் காலம் காலமாகப் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த இனத்தவர்களே. ஆகவே அவர்களுக்கென்று கொழும்பில் சலுகைகள் ஏதேனும் கொடுக்கத் தேவையில்லை என்றார்கள்.

அதாவது காலங்காலமாகத் தமது அரசர்களின், மக்கள் தலைவர்களின் வழிநடத்துதலின் கீழ் வடக்கு- கிழக்கு மக்கள் தம்மைத் தாமே ஆண்டு வந்தார்கள் என்பதை, இன்று முழு நாடும் தமக்கே சொந்தம் என்று கூறுவதற்கு முரணான விதத்தில் அன்று அவ்வாறு கூறியே கொழும்பில் தமிழர்களுக்குச் சலுகைகள் ஏதுந் தேவையில்லை என்றார்கள்.

அருணாசலம் போன்ற தமிழினத் தலைவர்கள் பல்லின, பல்மத, பல்கலாசார மக்களை இலங்கையர்கள் என்ற ஒரு பாரிய அலகினுள் ஒன்று படுத்த விழைந்த போது "நாம் பெரும்பான்மையினர். நம் வசமே அதிகாரம் கையிருக்க வேண்டும். எங்கள் நடத்துதலிலேயே மற்றைய இனத்தவர்கள் வாழ வேண்டும்" - என்ற ஒரு ஆணவப் போக்கு சிங்கள மக்கள் தலைவர்களிடையே அன்றே வேரிடத் தொடங்கி விட்டது. இந்த

## மற்றவர் நமக்கு அனுசரணையாக வாழாவிட்டால் அவரை எதிரி என்று கணிக்கும் தளர்வு நிலை இருசாராரிடம் உண்டு

முளைதான் பின்னர் மரமாகியது. அதிகாரம் உள்நாட்டவர்களுக்குக் கிடைக்கப் போகின்றது என்று கண்டதும் அதைத் தம் வசம் வைத்திருக்க அன்றே சிங்கள மக்கள் தலைவர்கள் கங்கணங் கட்டிக் கொண்டார்கள்.

1926 ஆம் ஆண்டில் ஒக்ஸ் போட் பல்கலைக்கழகத்தில் பயின்று வெளிவந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க இலங்கைக்கு சமஷ்டி முறையே சிறந்தது. என்று கூறியபோது, அவ்வாறு அவர் கூறுவதற்குப் பத்து வருடங்களுக்கு முன் சிங்களத் தலைவர்கள் கொண்டிருந்த அதே மனோநிலையில் இருந்துதான் அவர் அவ்வாறு கூறினார் என்று ஊகிக்கலாம். அதாவது வடக்கு - கிழக்கே தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்கள்; மற்றைய மாகாணங்களோ சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் இடங்கள்; எனவே இரு தரப்பினருக்கும் தன்னாட்சி கொடுத்து சமஷ்டி முறையில் நாடு ஆளப்பட வேண்டும் என்றே அவர் கூறினார்.

அதாவது, வடக்குக் கிழக்கிற்கு வெளியே வாழுந் தமிழ் மக்களுக்கு எந்தவித சலுகையும் தேவையில்லை. ஆனால், வடக்குக் கிழக்கு மக்கள் தம்மைத் தாமே ஆள்வது சரியானது என்பதே அவர்களின் அப்போதைய கருத்தாக இருந்தது. அன்று இலங்கை முழுவதும் பரந்து வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கினுள் தாங்கள் அடங்கி, ஒடுங்கி வாழ நேரிடுமோ, தமது பொருளாதார விருத்தி தடைப்படுமோ - என்ற பயத்தில் சமஷ்டியைத் தமிழ் மக்கள் பொதுவாக அக்காலக்கட்டத்தில் எதிர்த்தார்கள். அப்பொழுதெல்லாம் கொழும்பை விடப் பல் நகரங்களில் அதுவும் எனக்குத் தெரிந்த வரையில் அநுராதபுரம், கெக்கிராவை, திஸ்ஸமகராமை, கதிர்காமம் போன்ற இடங்களில் தமிழ்பேசும் மக்கள் செறிந்து வாழ்ந்து வந்து கொண்டிருந்தனர். பாரிய வர்த்தக நிலையங்களை [illegible] பல இடங்களில் நடத்தி வந்தனர். வடக்கு - கிழக்கிற்குத் தமிழ் மற்றைய மாகாணங்களுக்குச் சிங்களம் - என்று1956 இல் சட்டம் இயற்றப்பட்டிருப்பின் இன்று கூடத் தமிழர்கள் நாடு பூராகவும் செறிந்து வாழ்ந்து வந்து கொண்டிருப்பர். தெற்கில் சிங்கள மொழியைப் பயின்று சிங்களவர்களுடன் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குக் கூடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பர். கிழக்கு மாகாணச் சிங்களவர் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்று தமிழ் பிரதேசங்களில் அவர்களின் பிரதிநிதிகளாகவும் வந்திருப்பர்.

ஆனால், அதற்கு இடங்கொடுக்காத வகையிலேயே சிங்கள மக்கள் தலைவர்கள் 1915 ஆம் ஆண்டளவில் இருந்து நடந்து வந்துள்ளனர். கொஞ்சம் கொஞ்சமாக அதிகாரத்தைத் தம் வசப்படுத்திப் பின்னர் முழுமையாகத் தம் கட்டுப்பாட்டுக்குள் நாட்டின் அதிகாரத்தைக் கொண்டு வந்து, தமிழர்களைச் சட்டத்தின் மூலமும், பலாத்காரத்தின் மூலமும் பக்கச் சார்பான நடவடிக்கைகள் மூலமும், ஒதுங்கி, நாட்டை விட்டுத் துரத்தி இன்று "இந் நாடு முழுவதும் நமதே; எங்கள் அனுமதியுடன் வேண்டுமானால் இருங்கள்; அதிகம் கேட்க உங்களுக்கு உரித்தில்லை; நீங்கள் வந்தேறு குடிகள்" - என்ற பாணியில் பேசவும் தலைப்பட்டுள்ளனர்.

முக்கியமாக இந்த நூலின் ஈற்றில் 'தீர்வுக்கான வழிமுறைகள்' என்ற தலையங்கத்தின் கீழ் அவர் அதிகாரப் பகிர்வுகள், கூட்டாச்சி, சமஷ்டி, பிரிந்து செல்லுதல் என்று தமிழ் மக்கள் முன்னிருக்கும் பலவிதமான தீர்வுக்கான வழிமுறைகளை ஆராய்ந்திருப்பது எனது கவனத்திற்கு வந்தது. ஆசிரியரின் கருத்துப்படி தமிழ் பேசும் அலகாகத் தமிழ் ஈழத்தை உருவாக்குதல் தான் மிகச் சிறந்த தீர்வு. அதற்கான காரணங்களை அவர் கூறியுள்ளார்.

ஆசிரியர் உண்மையில் அறிவு பூர்வமாக - ஒரு ஆராய்ச்சியாளர் என்ற விதத்திலேயே தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். நாளை வெள்ளைவான் அவரையோ எம்மில் எவரையேனுமோ கடத்திச் சென்றாலும் அவரின் அந்த அறிவு பூர்வமான தகுந்த காரணங்களோடு தரப்பட்டுள்ள கருத்துக்கள் எம்மால் புறக்கணிக்கத்தக்கவை அல்ல. அவ்வாறு புறக்கணிக்காது அவரின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது ஜனநாயக பாரம்பரியத்தின் ஒரு சிறப்பம்சம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு கருத்தை ஒரு ஆராய்ச்சியாளர் கூட வெளியிடுவது தற்போதைய எங்கள் சட்டத்திற்குப் புறம்பானது என்று சிலர் கருத்துத் தெரிவிக்கலாம். இருப்பினும் அறிவு, ஆராய்ச்சி, கருத்து வெளியிடல் என்பன வேறு. நடைமுறைச் செயல் நடப்புக்கள், அவற்றை ஆதரிப்பது என்பன வேறு. இரண்டையும் நாங்கள் குழப்பிக் கொள்ளக்கூடாது.

நாட்டைக் கூறுபோடும் விதத்தில் ஆயுதம் தாங்கி பிரிவினைக்காகப் போராடுவது ஒரு நிலை. நாட்டின் சரித்திரம் பிரிவினையையே நோக்கிச் செல்கின்றது என்று காரணம் காட்டி அறிவுபூர்வமாகத் தமது கருத்துக்களை எடுத்தியம்புவது இன்னொரு நிலை. முன்னையதைத்தான் சட்டம் தடுக்கின்றது என்று நம்புகிறேன். ஆகவே ஆசிரியர் கூறியிருக்கும் கருத்தை அவர் அவ்வாறு வெளிப்படுத்த, அவருக்குப் பூரண உரித்து உள்ளது என்பதை ஆணித்தரமாக முதற் கண் கூறிவிட்டு, நாடு பிரிவினைக்கு உள்ளாக வேண்டுமென்று வாதாடுவதற்கு முன் சிங்கள மக்கள் தலைவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை அளித்து அவர்களின் உண்மைச் சொரூபத்தை வெளிக்கொண்டுவருவது சாலச் சிறந்தது என்பது எனது கருத்து.

சரித்திரம் பலதையும் எமக்கு எடுத்தியம்பியுள்ளது. மனித உறவுகள் பலதையும் எமக்கு எடுத்தியம்புகின்றன. இவை எல்லாவற்றையும் ஊடறுத்துச்செல்வது மனித நேயம். பிரிந்து விட்டால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்று எண்ணுவது சிறுப்பிள்ளைத் தனம். போரின் நடுவிலும் இனப்படுகொலையின் மத்தியிலும் பிரிக்கப்படாத ஒரு இலங்கையை நாங்கள் காப்பாற்றி விடலாகாதா - என்ற கருத்தையே எனது மனம் நாடுகிறது. காரணம் சிங்கள - தமிழ் மக்கள் அடிப்படையில் ஒரே இனத்தவர்களே. இரு தரப்பாரும் உணர்ச்சிமிக்கவர்கள். அதுவே அவர்களின் சிறுமையும் பெருமையும் ஆவன.

சிங்கள மொழி பாளிமொழியிலிருந்து பல சொற்களைத் தனதாக்கிக் கொண்டிருந்தாலும், 1956 ஆம் ஆண்டின் பின்னர் ஹிந்தி மொழியில் இருந்து பல சொற்களை அரச திணைக்களங்கள், சிங்கள மொழிக்குள் வரவேற்றிருந்தாலும் அடிப்படையில் சிங்களமும் ஒரு திராவிட மொழியே. மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகள் எவ்வாறு தமிழ் மொழியில் இருந்து பிரிந்து சென்றனவோ அதுபோலத்தான் பௌத்தத்தின் வருகையின் பின்னர் சிங்கள மொழி முன்னைய திராவிட மொழி மூலத்தில் இருந்து பிறந்தது எனலாம்.

மேலும் சிங்கள மக்கள் வட இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பதற்கு எந்தவித சரித்திரச் சான்றுகளும் இல்லை. ஆனால் திராவிடப் பின்னணி கொண்ட சிங்கள இனமானது பல மக்கட் கூட்டங்களின் சேர்க்கை என்பது வெள்ளிடை மலை.

ஆணவச் சிந்தனைகள் சிங்களவருக்கும் தமிழர்களுக்கும் பொதுவான ஒன்றுதான். விட்டுக்கொடுத்து வாழ்வதிலும் பார்க்கத் "தான் வாழ வேண்டும். மற்றவர்கள் தமக்கு அனுசரணையாக வாழவேண்டும். இல்லையென்றால் அவர்கள் தமது எதிரிகள்" என்ற ஒரு நிலைப்பாடு இரு மொழி பேசுவோர் இடையேயும் உறைந்திருக்கும் ஒரு தளர்வு நிலை.

இலங்கையில் 1956 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் எல்லா அரசுகளும் வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள், வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்கள் என்ற கருத்தை ஏற்க மறுக்கின்றன. ஆனால் கிட்டத்தட்ட அவ்விரு மாகாணங்களிலும் பாரம்பரியமாகத் தமிழ் மொழியே காலம் காலமாகப் பேசப்பட்டு வந்துள்ளது என்பதை அவர்கள் ஏற்றே ஆக வேண்டும். அதாவது இனம் வேறு, மொழி வேறு. இனத்தை மறந்தாலும் மொழியை மறக்க முடியாது. மொழிபற்றிய உண்மையை அவர்கள் மறுத்தால் சர்வதேச நாடுகள் யதார்த்தமான அக்கருத்தை அவர்கள் ஏற்க வைக்கலாம்.

அதாவது தமிழ்மொழி பெரும்பான்மையாக அவ்விரு மாகாணங்களிலும் தொன்றுதொட்டு பேசப்பட்டு வந்துள்ளதை அவர்கள் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஏனென்றால் அது சரித்திர உண்மை. கிழக்கு மாகாணம் கண்டிய மன்னர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தமையால் அது சிங்களவருக்கே சொந்தம் என்பது ஹெல உறுமய போன்ற இயக்கங்களின் வாதம். வெளிநாட்டவர் இலங்கைக்கு வந்த காலத்தில், வடக்குக் கிழக்கில் தமிழ் மொழியே பேசப்பட்டு வந்தது என்பதையாவது அவர்கள் ஏற்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 ★ 12 ★ 1942 | 05 ★ 11 ★ 2008 |



## திருமதி ராணி சுப்பிரமணியம்

அன்புடன் எம்மை அரவணைத்தே ஆதரித்து
பண்புடன் நாளும் பாரினில் வாழ்ந்து - தண்மை சேர்
குணங்கள் மேவி தருமநெறிச் சீர்பெற்ற - பெரியம்மாவே
நின் நினைவு என்றும் எம் நெஞ்சினில் நிலைக்கும்!

(80373)

கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

க.வினோதிக்கா, க.கிஷோபன்
(பேறாமக்கள்).

# நீர்வேலி மயானப் பகுதியில் இறந்த கால்நடைகளால் துர்நாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.5

நீர்வேலி தெற்கு இந்து மயானப் பகுதியில் இறந்த கால்நடைகள் போடப்பட்டிருப்பதால் இந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடும் மழை வெள்ளம் காரணமாக இறந்த விலங்குகள் மயானப் பகுதியில் போட்டிருப்பதால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும்- சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

(203-224)


# கால்நடை இழப்புகளை பதிவு செய்தல்

வெள்ள அனர்த்தம் காரணமாக இறந்த கால்நடைகள் பற்றிய விவரங்களை வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய நிலையம் சேகரித்து வருகின்றது.

கால்நடைகளை இழந்தவர்கள் பண்ணைப் பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை போன்றவற்றுடன் இழப்புகள் தொடர்பாகக் கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் வந்து பதிவு செய்துகொள்ளுமாறு கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

(204)

# 12ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## பொன்.நாகமணி

(மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகரும் சமூக சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்தவரும் சங்கீத விற்பன்னரும்)

| வளர்மதிக்காய் | வான்மதிக்காய் |
|---|---|
| 25★10★1936 | 05★12★1996 |

பூவுலகில் உன் சேவை போதும் புண்ணியனே
என்று வஞ்சகமாய் வானுலகோர் வலிந்து
இழுத்தனரோ? இன்னும் உன் சேவை
இங்கே தான் தேவை இறங்கி வாராயோ?

(இ/555366)

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

வளர்மதி சனசமூக நிலையமும் அதன்
உப அமைப்புகளும்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

## இலங்கையர் குகநாதன்

பிறப்பு 23.07.1967

இறப்பு 05.11.2008


எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்ற எமது அன்புத் தெய்வம் அமரர் இலங்கையர் குகநாதன் அவர்கள் சிவபதமெய்திய செய்தி கேட்டு உடன் ஓடிவந்து உதவி புரிந்தவர்களுக்கும் அவரது இறுதிச் சடங்குகளின்போது கலந்துகொண்டவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் தமது அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (05.12.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொதுநூலக வீதி,
கைதடி தெற்கு, கைதடி.

(30452)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## பொன்னையா பஞ்சாட்சரம்

(முன்னாள் ஊழியர், தபால் தந்திச் சேவை)

காரைநகர், தோப்புக்காட்டைப் பிறப்பிடமாகவும், இல.08, கன்னபுரம், நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பஞ்சாட்சரம் நேற்று (04.12.2008) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பொன்னையா - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற இராசலட்சுமியின் கணவரும் பரராஜேஸ்வரி (இந்தியா), பரமசிவம் (பிரான்ஸ்), கோகிலா (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் குகேந்திரன் (இந்தியா), நீலவேணி (பிரான்ஸ்), லோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், கனகசுந்தரம் மற்றும் வேலும்மயிலும் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.08, கன்னபுரம்,
நாவாந்துறை.

(80458)

தகவல்:
பொ.வேலும்மயிலும் (சகோதரன்).

# ஒரு மரத்துக் காய்களின் ஓராண்டு நினைவலைகள்





| சுப்பிரமணியம் கௌசிகன் | | சுப்பிரமணியம் இதயராஜ் |
|---|---|---|
| 27★10★1979 | பிறப்பு | 09★11★1981 |
| 16★12★2007 | பறிப்பு | 03★09★2007 |
| (திதி: பூர்வபக்க சப்தமி) | | (திதி: அபரபக்க சஷ்டி) |

முளைவிட்டுப் பயிராகி விளைவு வரும் என்றிருந்தோம்
வளம் கண்டு உம் நிழலில் வாழலாம் என நினைத்திருந்தோம்
கண்டவை வெறும் கனவாக மண்ணிருந்து பறித்தெடுத்து
போயினனே அந்தக் காலன்
உளம் நொந்த களைப்பு இன்னமும் ஆறவில்லை
வந்ததுவே ஓராண்டு!

68/2, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(80427)

# நெஞ்சமதில் நீங்காத 3ஆம் ஆண்டு நினைவாராதனையும் இருபத்திரெண்டாவது பிறந்தநாள் நினைவலைகளும்

குவலயத்தில் 01.02.1986

குகனடியில் 05.12.2005



## அமரர் விஜேந்திரன் பிரதீபன்

(யா/மத்திய கல்லூரி மாணவன்)

பூப்போல பொலிவுடன் பிறந்தாயே!
பூப்போல் உன் ஆயுளும் குறுகியதே
நேற்று நடந்தது போல் நெஞ்சு வலிக்கிறதே!
தேறும் வழியின்றி கண்ணீர் வடியுதே!
புன்னகையுடன் துள்ளித்திரிந்த உனக்கு
புது வாழ்த்துமடல் அனுப்ப வழியில்லையே!
பாசமாக உனைப் பாதுகாத்து வளர்த்தோமே!
பரிதவித்து நீ செல்ல பாதகம் புரிந்தாரே!
தண்ணீரில் நீ மறைந்தாய் உனை
கண்ணீரோடு இன்றும் தேடுகின்றோம்.

உனது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(80406)

கொழும்பு.

அன்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை தாக்குதல் போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெற வாய்ப்பளிக்காதீர்

## பாகிஸ்தானில் கொண்டலீசா வலியுறுத்து



இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசா ரைஸ், வியாழக்கிழமை பாகிஸ்தானிற்கு எதிர்பாராத விஜயமொன்றை மேற்கொண்ட வேளை, அந்த நாட்டின் பிரதமர் யூசுப் கிலானியைச் சந்தித்து உரையாடுவதை காணலாம்.

இஸ்லாமாபாத், டிச. 05

மும்பாய் தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழ்வதற்கு பாகிஸ்தான் அனுமதிக்க கூடாது என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசா ரைஸ், பாகிஸ்தான் அரசியல் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மும்பாய் தீவிரவாத தாக்குதல்களுக்குப் பின்னர் இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட பதற்ற நிலையை தணிப்பதற்காக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசா ரைஸ் பாகிஸ்தானுக்கு எதிர்பாராத விஜயமொன்றை மேற்கொண்டு அந்த நாட்டின் தலைவர்களைச் சந்தித்துள்ளார்.

புதுடில்லியிலிருந்து இஸ்லாமாபாத்துக்கு வியாழக்கிழமை சென்றுள்ள கொண்டலீசா ரைஸ் அந்த நாட்டின் ஜனாதிபதி அசிவ் அலி சர்தாரி, பிரதமர் யூசுவ் ராசா கிலானி ஆகியோரைச் சந்தித்துள்ளார்.

மும்பாயில் நடைபெற்றது பயங்கரமான தாக்குதல். அது போன்றவொன்று நிகழ்வதற்கு மீண்டும் அனுமதிக்கக் கூடாது என ரைஸ் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா மெஹ்மூட் குரேசியிடம் ரைஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னதாக தன்னுடன் விமானத்தில் பயணம் செய்த செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்துள்ள ரைஸ், பயங்கரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தான் கடுமையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென கருத்து தெரிவித்துள்ளார். பாகிஸ்தானில் இதுகுறித்து தாம்பேச்சு மேற்கொள்ளப் போகிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் இதற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை தானே தீர்மானிக்க வேண்டும். எனினும், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை உறுதியானதாகவும், கடுமையானதாகவும் அமைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தாக்குதல் சம்பவம் குறித்து அமெ. அதிகாரிகளுடன் பேச்சு

### இந்திய வெளியுறவு அமைச்சர் நடவடிக்கை.

வாஷிங்டன், டிச 05

மும்பைத் தாக்குதல் சம்பவம் குறித்து அமெரிக்கா அதிகாரிகளுடன் இந்திய வெளியுறவுத் துறைச்செயலர் சிவ்சங்கர் மேனன் ஆலோசனை நடத்தினார்.

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு வாஷிங்டன் வந்துள்ள மேனன், உள்துறை துணைச் செயலர் ஜோன் நெக்ரோபோன்டே, அரசியல் விவகார இணைச் செயலர் வில்லியம் பர்ன்ஸ் ஆகியோருடன் கலந்து ஆலோசனை நடத்தினார்.

மும்பைத் தாக்குதல் சம்பவம் நடப்பதற்கு முன்னரே, மேனனின் அமெரிக்கப் பயணம் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், பேச்சுகளில் மும்பை தாக்குதல் சம்பவம் முக்கிய இடத்தைப் பெற்றது.

இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், தீவிரவாதத்துக்கு எதிராக சேர்ந்து பணியாற்றுதல், இந்திய - அணுசக்தி ஒப்பந்தம், இராணுவ ஒத்துழைப்பு, பொருளாதார, முதலீட்டு விடயங்கள் ஆகியவை இவர்களது பேச்சில் இடம்பெற்றன.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையின் தலைவர் நான்சி பெலோசியும், மேனனைச் சந்தித்து மும்பைத் தாக்குதலுக்கு தனது இரங்கலைத் தெரிவித்துக்கொண்டார்.

தெற்காசிய விவகாரங்களுக்கான செனட்டர் ஜோன் கெர்ரியுடனும் மேனன் பேச்சு நடத்தினார். இதுதவிர, அமெரிக்காவின் அறிவு ஜீவிகள், திட்டம் வகுப்பதில் முக்கிய பங்கு வகிப்போர் ஆகியோருடனும் அவர் கலந்தாலோசித்தார்.

இது விடயத்தில் அனைத்துவித ஒத்துழைப்பையும் இந்தியாவுக்கு அளிக்க அமெரிக்கா தயாராக உள்ளது என அதிகாரிகள் அனைவரும் மேனனிடம் உறுதியளித்துள்ளனர்.

## பாகிஸ்தான் மீது போர் தொடுத்தால் இந்தியாவில் ஊடுருவித் தாக்குவோம்

### தேரிக் - ஈ. தலிபான் அமைப்பு மிரட்டல்

இஸ்லாமாபாத், டிச. 05

"பாகிஸ்தான் மீது இந்தியா படையெடுத்தால், இந்தியாவுக்குள் ஊடுருவி, பரவலாக பயங்கரத் தாக்குதல்களை மேற்கொள்வோம். பேரழிவுகளை ஏற்படுத்துவோம்" என பாகிஸ்தானிலுள்ள தேரிக்-ஈ-தலிபான் என்னும் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது பாகிஸ்தானில் தடை விதிக்கப்பட்ட தீவிரவாத அமைப்புகளில் ஒன்று. இந்த அமைப்பின் தளபதி குவாரி ஹுசேன் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

எங்கள் அமைப்பு தடை செய்யப்பட்டிருந்தாலும் நாங்கள் பாகிஸ்தானுக்கு எதிரானவர்கள் அல்லர். பாகிஸ்தான் எங்கள் தாய் நாடு. தாய் மண்ணுக்காக எம் உயிரைத் தியாகம் செய்யவும் பின்வாங்கமாட்டோம் என்றும் அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

எங்களுக்குச் சொந்தமான மலைப் பிராந்தியங்கள், கிராமப் பகுதிகள் ஆகியவற்றின் மீது பாகிஸ்தான் இராணுவம் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியமையால்தான் நாம், அதனை எதிர்த்து சண்டையிட்டோம். எது எப்படியிருப்பினும் நாங்கள் பாகிஸ்தானியர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்காக பாகிஸ்தான் இராணுவத்தை இந்தியா அழிக்க நினைத்தால் - முனைந்தால் வெறுமனே வேடிக்கை பார்க்கமாட்டோம். கிளர்ந்தெழுவோம். இந்தியா மட்டுமல்ல, வேறு எந்த சக்தியாக இருந்தாலும் சரி, நாம் பாகிஸ்தானுக்குள் நுழைய அனுமதிக்க மாட்டோம் என்றும் குவாரி சூளுரைத்துள்ளார்.




## தாய்லாந்தில் 8 ஆம் திகதி தேர்தல்

தாய்லாந்தில் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறுமென இடைக்காலப் பிரதமர் சரண்விரகுல் அறிவித்துள்ளார்.

தேர்தல் முறைகேடுகள் தொடர்பான விசாரணையில், உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கிணங்க பிரதமர் சோம்சாய் பதவியிலிருந்து விலகியமையை அடுத்து, சாவரத் சரண்விரகுல் இடைக்காலப் பிரதமராக பதவியேற்றுள்ளார்.

தேர்தலில் முறைகேடுகள் செய்தமைக்காக சோம்சாயை பதவி விலகுமாறும், அவரது கட்சியைக் கலைக்குமாறும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுத் தீர்ப்பு வழங்கியிருந்தது.

## தீவிரவாதிகளைக் கண்டுபிடிப்பதற்கு இந்தியாவுக்கு பாக். உதவ வேண்டும்

### புதுடில்லியில் அமெ. வெளிவிவகார அமைச்சர்

புதுடில்லி, டிச. 05

பயங்கரவாதிகளைப் பிடிக்க பாகிஸ்தான் உதவ வேண்டும் என பாகிஸ்தானை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலீசா ரைஸ் வலியுறுத்தினார்.

மும்பைத் தாக்குதலால் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், பிரஸ்ஸல்ஸிலிருந்து புதன்கிழமை காலை கொண்டலீசா ரைஸ் புதுடில்லி வந்தடைந்தார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில், இந்தத் தாக்குதல் சம்பவத்தில் அல்-குவைதா அமைப்புக்குத் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தை மறுப்பதற்கில்லை என்றார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்தியாவும், அமெரிக்காவும் ஒன்றிணைந்து புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம்தான் இதுபோன்ற பயங்கரவாதத் தாக்குதல்களை முறியடிக்க முடியும்.

மும்பையில் நடைபெற்ற தாக்குதல் மீண்டும் தொடராமல் இருக்கவேண்டுமானால், பிற நாடுகள் இந்தியாவுக்குத் தேவையான ஒத்துழைப்பை அளிக்கவேண்டியது மிகவும்அவசியம்.

இந்த விடயத்தில் அமெரிக்காவின் முழு ஒத்துழைப்பு இந்தியாவுக்கு உண்டு என்பதை உணர்த்தவே நான் இப்பயணத்தை மேற்கொண்டேன். தேவைப்பட்டால் தடயவியல் சோதனை மூலம் இதில் தொடர்புடைய கும்பலைக் கண்டுபிடிக்க அமெரிக்கா உதவத் தயாராகவுள்ளது.

இந்த விடயத்தில் பாகிஸ்தான் அரசு திறந்த மனதுடன் உடனடியாக செயலாற்ற வேண்டும். அப்போதுதான் தீவிரவாதத்தை ஒடுக்குவதில் அந்நாட்டு அரசு மிகுந்த பொறுப்போடு செயற்படுகிறது என்பது உலக நாடுகளுக்குத் தெரியவரும்.

பாகிஸ்தானிலிருந்து செயற்படும் பயங்கரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என இந்தியா, பாகிஸ்தான் அரசிடம் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்று, அது செயற்படவேண்டும். இதன் மூலம் பாகிஸ்தான் பற்றிய யூகங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும் - என்[illegible]

## மும்பைத் தாக்குதல் குறித்த இந்தியப் பட்டியலில் லஷ்கர் இ.தெய்பா அமைப்பாளரும் உள்ளடக்கம்

இஸ்லாமாபாத், டிச. 05

தங்களிடம் ஒப்படைக்கும்படி பாகிஸ்தானுக்கு இந்தியா அனுப்பியுள்ள பட்டியலில் லஷ்கர்-இ-தொய்பா நிறுவனர் ஹபீஸ் முகம்மது சய்யீத், சர்வதேச தீவிரவாதக் கும்பல் தலைவர்கள் தாவூத் இப்ராஹீம், டைகர் மேமன், பயங்கரவாதத் தலைவர் மௌலானா மசூத் ஆஸார் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

மும்பைத் தீவிரவாதத் தாக்குதலில் லஷ்கர்த்-இ-தொய்பாவுக்குத் தொடர்பு இருப்பதாக இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

மும்பைத் தாக்குதலுக்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இரு நாடுகளின் உள்துறைச் செயலர்கள் நிலை ஆலோசனைக் கூட்டத்தில் 20 பயங்கரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தியா தரப்பில் கோரப்பட்டது. அவர்களது பெயர்கள் அடங்கிய பட்டியலையும் ஒப்படைத்தது.

இந்தப் பட்டியல் தொடர்பாக இஸ்லாமாபாத்தில் பிரதமர் யூசுப் ராசா கிலானி தலைமையில் அரசியல் கட்சித் தலைவர்கள் செவ்வாய்க்கிழமை இரவு ஆலோசனை நடத்தினர்.

எனினும், இந்தியாவின் கோரிக்கை மீது என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை தெரிவிக்க நிருபர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சரும் அவாமி முஸ்லிம் லீக் கட்சித் தலைவ[illegible] அகமது மறுத்துவிட்டார்.

இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் சிலர் பாகிஸ்தானில் இல்லை. மற்றவர்களை பாகிஸ்தான் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் கண்காணித்தபடி உள்ளனர். எனவே, இவர்களை இந்தியாவிடம் ஒப்படைக்க முடியாது என பாக். அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள் என தி நியூஸ் டெய்லி செய்தி வெளியிட்டுள்ளது.

## பிரேசில் நாட்டு ஏவுகணைகளை கொள்வனவு செய்கிறது பாகிஸ்தான்

பிரேசில் 100 ஏவுகணைகளை பாகிஸ்தானுக்கு விற்பனை செய்வதற்கு, பிரேசில் அரசு அனுமதி அளித்துள்ளது. வானிலிருந்து தரையிலுள்ள இலக்குகளைத் தாக்கித் தகர்ப்பதற்கு இந்த ஏவுகணைகள் பயன்படும்.

மார் 1 என்ற இந்த ஏவுகணைகள் நடுத்தரத் தூரத்துக்குப் பாய்ந்து தாக்கக்கூடியவை. கதிரியக்கத்தை எதிர்த்து செயற்படக்கூடியவை. இவற்றை மறைத்து வைக்கவும் முடியும். விற்பனைப் பேரம் 1,620 கோடி ரூபா மதிப்புமிக்கதாகும் என பிரேசில் பாதுகாப்பு அமைச்சர் நெல்சன் சோபிம் தெரிவித்தார்.

பிரேசில் மெக்ட்ரான் என்ற நிறுவனம் இந்த ஏவுகணைகளைத் தயாரித்துள்ளது. பாகிஸ்தானின் ஏவுகணை கொள்வனவுக்கான ஒப்பந்தம் கடந்த ஏப்ரலில் பாகிஸ்தானுக்கும் பிரேசிலுக்குமிடையில் கைச்சாத்தானது என்றும் அவர் விளக்கினார்.

## மும்பை தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளின் சடலங்களை இந்தியாவில் அடக்கம் செய்யாதீர்

### இஸ்லாமிய அறிஞர்கள் எதிர்ப்பு

சமானா, ஹரியானா, டிச. 05

மும்பைத் தீவிரவாதத் தாக்குதலில் ஈடுபட்டு பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தீவிரவாதிகளின் சடலங்களை இந்தியாவில் எங்கும் அடக்கம் செய்யக் கூடாது. அவர்களின் சடலங்களை கடலில் வீசி எறிய வேண்டும் என இஸ்லாமிய அறிஞர்கள் பலர் கூறியுள்ளனர்.

பஞ்சாப் மாநிலம் சமானா என்னும் இடத்தில், இஸ்லாமிய அறிஞர்கள் மாநாடு நடந்தது. இதில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.

இதில் பங்குபற்றியவர்கள், "மும்பைத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் இஸ்லாமிய சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள். இஸ்லாமில் வன்முறைக்கு இடமே இல்லை. அமைதியையும், உலக சகோதரத்துவத்தையும் மட்டுமே அது போதிக்கிறது" என்றார்

"மும்பையில் அப்பாவிகள் இரத்தம் சிந்தக் காரணமான தீவிரவாதிகளின் சடலங்களை எங்கும் அடக்கம் செய்ய அனுமதிக்கக்கூடாது. அவற்றை கடலில் தூக்கி எறிய வேண்டும்" என்றும் கோபாவேசமாகக் கூறினார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த ஹைதர் ரஸா பேசுகையில், இஸ்லாமில் வன்முறைக்கோ, தீவிரவாதத்துக்கோ இடமில்லை.

கொமாண்டோ படையினரால் கொல்லப்பட்ட தீவிரவாதிகளின் சடலங்களை அடக்கம் செய்ய இடம் தரமாட்டோம் என மும்பை மயான நிர்வாகங்கள் கூறியுள்ளமையை வரவேற்கிறேன். அவர்களின் சடங்களை கடலில் வீசி மீன்களுக்கு இரையாக்கவேண்டும் என்றார்.

ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த குலாம் ரஸா பேசுகையில், தீவிரவாதிகள் உண்மையான முஸ்லீம்கள் அல்லர் என்றார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த அலாமா ஹசன் சபார் நக்கி தமதுரையில், இந்தியா, பாகிஸ்தான் முன்னேறுவதை விரும்பாத மூன்றாவது சக்தியின் சதிதான் மும்பை தாக்குதல் சம்பவம் என்றார்.

ஹரியானா [illegible] வாய் இந்த [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த மழையிலுள்ள ஈழத் தமிழரை காக்க இந்திய அரசு முன்வரவேண்டும்

## திருமாவளவன் வேண்டுகோள்



சென்னை, டிச. 5

இந்திய அரசு தனது பிடிவாதப்போக்கை தூக்கியெறிந்து விட்டு, இலங்கைச் சிங்கள இராணுவத்துக்கு வழங்கி வரும் உதவிகள் அனைத்தையும் நிறுத்தி இரத்த மழையில் உள்ள ஈழத் தமிழர்களைக் காக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், ஈழத் தமிழர்களின் பிரச்சினை தீர தமிழீழம் உருவாவதே தீர்வாக அமையும். அந்தத் தீர்வை விடுதலைப் புலிகள் அமைப்பால் மட்டுமே எட்ட முடியும்.

சென்னையில் செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு-

இந்தியாவுடன் எப்போதும் நட்புறவு பாராட்டவே விடுதலைப் புலிகள் விரும்புகின்றனர். எனவே புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று அந்த அமைப்பின் தலைவர் பிரபாகரன் வெளிப்படையாக வலியுறுத்தியுள்ளார். அவரது இந்தக் கோரிக்கையை இந்திய அரசு பரிசீலிக்க வேண்டும்.

ஈழத் தமிழருக்காக தமிழக அரசு அனுப்பிய நிவாரணப் பொருள்கள் அங்குள்ள தமிழ் மக்களுக்குச் சென்று சேரவில்லை எனக் கூறப்படுகிறது. இந்திய அரசு நேரடியாக விநியோகம் செய்தால் மட்டுமே நிவாரண உதவிகள் தமிழ் மக்களைச் சென்றடையும்.

இலங்கைப் பிரச்சினையில் நாங்கள் காங்கிரஸ் கட்சியைக் குறை கூறவில்லை. இந்திய அரசின் நடவடிக்கைகளைத்தான் விமர்சனம் செய்கிறோம். மத்தியில் எந்த ஆட்சி அமைந்தாலும் இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கைகள் தமிழ் மக்களுக்கு விரோதமாகவே உள்ளன.

இந்திய அரசின் இராணுவ உதவிகளும், ஆதரவும் இலங்கைக்கு தொடர்ந்து அளிக்கப்படுகிறது. இதைத்தான் நாங்கள் கண்டிக்கிறோம்.

இந்திய அரசு தனது பிடிவாதப் போக்கை தூக்கிப் போட்டு விட்டு, சிங்கள இராணுவத்திற்கு உதவிகள் செய்வதை நிறுத்தி இரத்த மழையில் தவிக்கும் ஈழத் தமிழர்களைக் காக்க முன்வர வேண்டும்.

தங்கள் அமைப்பு மீதான தடையை இந்தியா நீக்க வேண்டும் என்று பிரபாகரன் கோரிக்கை விடுத்துள்ளார். அவரின் வேண்டுகோளை இந்திய அரசு கருணையுடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

விடுதலைச்சிறுத்தைகளின் இளஞ்சிறுத்தைகள் எழுச்சிப்பாசறையின் தொடக்க விழா மற்றும் தமிழீழ அங்கீகார மாநாடு 26ஆம் திகதி சென்னையில் நடைபெறுகிறது - என்றார்.

பின்னர் அவரிடம், தி.மு.க. கூட்டணியில் மீண்டும் பா.ம.க.வை சேர்க்க நீங்கள் தொடர்ந்து பாடுபட்டு வருகிறீர்கள் எனக் கூறப்படுகிறதே என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு அவர், பா.ம.க. மட்டுமல்ல நிறைய கட்சிகள் தி.மு.க. கூட்டணியில் இணைந்தால் பலம் தானே - என்றார்.

# தமிழக மீனவர் 21 பேர் விடுவிப்பு

இராமேஸ்வரம், டிச. 5

இலங்கைக் கடற்படையால் சிறைப் பிடித்துச் செல்லப்பட்ட தமிழக மீனவர்கள் 21 பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழக மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்தனர் எனக் கூறி இலங்கை கடற்படையினர் பிடித்து செல்வதும், அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்துவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இந்த நிலையில் கடந்த மாதம் இலங்கை கடற்படையினர் பிடித்துச் சென்ற 21 தமிழக மீனவர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இதுகுறித்து இராமேஸ்வரம் மீன்துறை உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு-

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த மாதம் 22ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற நொபிலி என்பவருக்கு சொந்தமான 912 எண் படகையும் அதில் சென்ற மீனவர்கள் கோவிந்தராஜ், சுந்தர், காளிமுத்து, இராமமூர்த்தி ஆகிய 4 மீனவர்களையும் கடல் எல்லையைத் தாண்டினர் என இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்று வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தனர்.

இதேபோல கடந்த சிலநாட்களுக்கு முன்பு ஜெகதாபட்டினத்தைச் சேர்ந்த 17 மீனவர்களும் இலங்கைக் கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் 21 பேரையும் இலங்கை அரசு நேற்றுமுன்தினம் விடுதலை செய்துள்ளது.

# அரசுக்கான ஆதரவை வாபஸ் பெற்றால் ஈழத் தமிழர் பிரச்சினை தீர்ந்து விடுமா?

## முதல்வர் கருணாநிதி கேள்வி

சென்னை, டிச. 5

மத்திய அரசுக்கு அளித்துவரும் ஆதரவைத் திரும்பப் பெற்றுவிட்டால் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்ந்து விடுமா?

- இவ்வாறு முதல்வர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து வலியுறுத்துவதற்கு முன்னார் டில்லியில் வைத்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் அதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

தயாநிதி மாறனை மத்திய அமைச்சரவையில் சேர்ப்பது தொடர்பாக பேசுவதற்கு நான் வரவில்லை.

மத்திய அரசுக்கு அளித்துவரும் ஆதரவைத் திரும்பப் பெற்றுவிட்டால், இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்ந்து விடுமா?

நேற்றுமுன்தினம் மத்திய அரசிடமிருந்து எங்களுக்கு வந்த கடிதத்தில் நிவாரணப் பொருள்கள் முறையாகச் சென்று கொண்டிருக்கிறது எனத் தெரிவித்திருக்கிறார்கள்.



மொத்தமாக போர் நிறுத்தம் ஏற்பட்டு, அங்கே தமிழர்கள் அமைதியாக வாழ்ந்தால் தான் எங்கள் திருப்திக்கு அர்த்தம் இருக்க முடியும். இது தலைவலி மருந்து மாதிரி.

இலங்கைத் தமிழர் போன்ற முக்கிய பிரச்சினையிலே தனித்து நிற்கும் அ.தி.மு.க., ம.தி.மு.க., தே.மு.தி.க. போன்ற கட்சிகளிடம் எந்த அளவுக்கு தாழ்ந்து போய் வேண்டுகோள் விடுக்க முடியுமோ அந்தளவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன். ஆனால், அவர்கள் அதை ஏற்பதாக இல்லை - என்றார்.

முதல்வரின் குடும்பத்துடன் இணைந்த தயாநிதி மாறன், டில்லி செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டி அரவாணிகள் உண்ணாவிரத ஒப்பாரி

## ஈழ அகதிகளின் கண்ணீரின் வலி தங்களுக்குத் தெரியுமாம்

சென்னை, டிச. 05

இலங்கையில் போர்நிறுத்தம் வேண்டி, எதிர்வரும் 8 ஆம் திகதி அரவாணிகள் உண்ணாவிரத ஒப்பாரிப் போரட்டம் நடத்துகின்றனர்.

இதுகுறித்து, அரவாணிகள் அமைப்பின் நிர்வாகிகள் கூறியவை வருமாறு-

இலங்கையில் போர்நிறுத்தம் வேண்டும் என பல்வேறு கட்சிகளும், அமைப்புகளும் கோரிக்கை விடுத்து வருகின்றன. குடும்பத்தைவிட்டு, சமுதாயத்தைவிட்டு அகதிகளாக வாழ்ந்து வரும் எங்களுக்கு, ஈழ அகதிகளுடைய கண்ணீரின் வலி தெரியும். அரவாணிகள் அமைப்பின் சார்பில், போர்நிறுத்தத்தை வலியுறுத்தி, சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை முன்பு வரும் 8 ஆம் திகதி உண்ணாவிரத மற்றும் ஒப்பாரிப் போரட்டம் நடத்துகிறோம்.

உண்ணாவிரதத்தை கனிமொழி எம்.பி. தொடக்கிவைக்கிறார். எங்களின் ஒருநாள் வருமானத்தை ஈழத் தமிழர் நிவாரணமாகக் கொடுக்க முடிவு செய்துள்ளோம். மாநிலத்தின் பலவேறு பகுதிகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும், ஆயிரக்கணக்கான அரவாணிகள், உண்ணாவிரதத்தில் பங்கேற்கவுள்ளனர் - என்றனர்.



# 70 வயதுக் கணவரை அம்மிக் கல்லால் அடித்துக் கொன்ற 60 வயது மனைவி

சென்னை, டிச. 5

70 வயதுக் குடிகாரக் கணவரை அம்மிக் கல்லால் அடித்துக் கொலை செய்துவிட்டு, குளியலறையில் வழுக்கி விழுந்து இறந்துவிட்டார் என நாடகமாடிய 60 வயது மனைவி கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை மேற்கு மாம்பலம் மகாதேவன் தெருவைச் சேர்ந்தவர் சந்திரசேகரன் (வயது 70). இவரது மனைவி பெயர் சூர்யபிரபா (60). இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். ஒரு மகன் அமெரிக்காவில் வேலைபார்க்கிறார். இன்னொரு மகன் சென்னையில் வசித்து வருகிறார்.

கடந்த செவ்வாய் நள்ளிரவில் சந்திரசேகரன் வீட்டிலுள்ள குளியலறையில் தலையில் பலத்த காயத்தோடு இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்தார். குளியலறையில் வழுக்கி விழுந்து அவர் இறந்து போனார் என மனைவி சூர்யபிரபா அசோக்நகர் பொலிஸில் முறைப்பாடு செய்தார். அசோக்நகர் பொலிஸார் சந்தேக மரணம் என்று வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வந்தனர்.

## இந்தியச் செய்திகள்

சந்திரசேகரனின் பிணம் சென்னை ராயப்பேட்டை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பிரேத பரிசோதனையில் சந்திரசேகரன் வழுக்கி விழுந்ததில் தலையில் அடிபட்டு இறக்கவில்லை என்றும், கல்லால் கடுமையாக அடித்து தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் டாக்டர்கள் கூறினர். இதனால் இந்த வழக்கு பரபரப்பானது.

உதவி கமிஷினர் சேது, இன்ஸ்பெக்டர் [illegible] ஆகியோர் இந்த வழக்கில் தீவிர விசாரணையை மேற்கொண்டனர். மனைவி சூர்யபிரபாவை கிடுக்கிப்பிடி போட்டு விசாரணை நடத்தினர். விசாரணையில், சூர்யபிரபாதான் கொலையாளி என்று தெரியவந்தது.



கணவரின் பிணத்துடன் சூர்யபிரபா இரவு வீட்டுக்குள் தனியாக இருந்துள்ளார். குடிபழக்கத்துக்கு அடிமையான சந்திரசேகரன் தினமும் குடித்துவிட்டு சென்று தொல்லை கொடுத்தார் எனக் கூறினார். இதனால் அம்மிக் கல்லைத் தலையில் போட்டு சந்திரசேகரனை கொன்றேன் எனவும், பின்னர் கொலையை மறைக்க குளியலறையில் வழுக்கி விழுந்து இறந்தார் என நாடகமாடினேன் என்றும் சூர்யாபிரபா குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதன்பேரில் அவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். அவர் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டது.

விசாரணையின்போது சூர்யபிரபா, பொலிஸாரைக் கடுமையாக மிரட்டினார். தன்னை பற்றிய செய்திகளை பத்திரிகைக்குக் கொடுத்தால் தீக்குளித்துத் தற்கொலை செய்வேன் என்று பயமுறுத்தினார். மேலும் உடல்நலக்குறைவு ஏற்பட்டது போலவும் அவர் நாடகமாடினார். ஆனால் பொலிஸார் சாதுர்யமாக விசாரணை நடத்தி அவரிடம் உண்மையை வரவழைத்தனர்.

# ஈமெயில் மூலம் டெக்கான் முஜாகிதீன் மிரட்டல் விமான நிலையங்களுக்குப் பலத்த பாதுகாப்பு



டில்லி, டிச. 5

மும்பைத் தீவிரவாதத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுக் கொண்ட டெக்கான் முஜாஹிதீன் தீவிரவாத அமைப்பு, சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் விமான நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தவிருக்கிறது என்று ஈமெயில் மூலம் மிரட்டல் விடுத்துள்ளது.

கடந்த வாரம் பாகிஸ்தானில் இருந்து கடல் வழியே வந்த தீவிரவாதிகள் மும்பையின் தாஜ் ஹோட்டல் உள்ளிட்ட 3 இடங்களில் தாக்குதல் நடத்தி 200 பேருக்கு மேல் பலியானார்கள். இந்தப் பயங்கரத் தாக்குதலுக்கு டெக்கான் முஜாஹிதீன் என்ற இயக்கம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து டில்லியை குறி வைத்திருக்கிறது அந்த இயக்கம் மற்றொரு இமெயில் மிரட்டலையும் அனுப்பியது.

இந்நிலையில், டெக்கான் முஜாஹிதீன் தீவிரவாத அமைப்பு புதிய இமெயில் மூலம் மீண்டும் ஒருமுறை தீவிரவாத தாக்கல் நடத்தப்போகிறது என மிரட்டல் விடுத்துள்ளது.

நேற்று முன்தினமிரவு அனுப்பப்பட்ட அந்த இமெயிலில் சென்னை, டில்லி மற்றும் பெங்களூர் ஆகிய விமான நிலையங்கள் மீது தீவிரவாதத் தாக்குதலை நடத்தப்போகிறது எனக் கூறியுள்ளது.

3ஆம் திகதி முதல் 7ஆம் திகதிக்குள் இந்தத் தாக்குதல் நடத்தப்படும் என்றும் அந்த மிரட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுடில்லியில் உள்ள இந்திராகாந்தி விமான நிலையத்திற்கு இந்த இமெயில் மிரட்டல் வந்துள்ளது.

மும்பைத் தாக்குதலையடுத்து ஏற்கனவே விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இமெயில் மிரட்டல் வந்துள்ளதையடுத்து மேலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மிரட்டல் இமெயில் ரஷ்யா மற்றும் சவுதி அரே[illegible] யத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு முன்னெடுத்துச் செல்லும் தற்போதைய யுத்தம் புலிகளுக்கு எதிரானதல்ல; தமிழருக்கு எதிரானதே!

## சபையில் சம்பந்தன் ஆவேசம்



கொழும்பு, டிசெ.5

அரசு முன்னெடுத்துச் செல்லும் தற்போதைய யுத்தம் தமிழருக்கு எதிரானதே அன்றி புலிகளுக்கு எதிரானதல்ல என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் அடித்துக் கூறியது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான பிரேரணை ஆகியவை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வரு மாறு:-

புலிகளால் கட்டவிழ்த்துவிடப் பட்டுள்ள பயங்கரவாதம்தான் இந்நாட்டில் உள்ளது என்ற அடிப்படையில் சிலர் பேசுகின்றனர்.

இந்த நிலைப்பாட்டை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். புலிகள் சிலசில தவறுகள் செய்தனர் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதனால் நாட்டில் இடம்பெறும் எல்லாச் சம்பவங்களுக்கும் புலிகள் காரணமல்லர்.

**பயங்கரவாதம் 1956 ஆம் ஆண்டிலேயே தொடங்கி விட்டது**

பயங்கரவாதம் என்பது இந்த நாட்டில் 1956 ஆம் ஆண்டு தொடங்கி விட்டது. அப்போது புலிகள் இருக்கவில்லை. தொடங்கப்பட்ட இந்தப் பயங்கரவாதம் தமிழருக்கு எதிராகத்தான் தொடங்கப்பட்டது.

பயங்கரவாதம் பிரபாகரனால் ஆரம்பிக்கப்படவில்லை. பொரும்பான்மை இன மக்களால்தான் ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக நாம் புலிகளின் வன்முறைகளையும் ஏற்கவில்லை.

சில விடயங்கள்தான் புலிகளை ஆயுதப் போராட்டத்திற்கு இழுத்து வந்தன. முக்கியமாக தமிழருக்கு எதிரான சம்பவங்கள் தான் புலிகளை ஆயுதம் ஏந்தச் செய்தன.

பல நாடுகளில் புலிகள் தடை செய்யப்பட்டாலும் கூட புலிகள் வருவதற்கு உந்து சக்தியாக இருந்த உண்மையான, நியாயமான காரணத்தை எவராலும் மறுக்க முடியாது புலிகளின் உருவாக்கத்திற்கு அரசு தான் காரணம்.

தற்போதைய யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கில் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் சுமார் 56 ஆயிரம் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்று நேற்று (04-12-2008) 'உதயன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுபோன்று கிழக்கில் இருந்து புலிகள் சென்றதன் பின்பும் அங்கிருந்த மக்களின் வீடுகள் வேண்டுமென்றே அழிக்கப்பட்டன.

**யுத்தத்தை நிறுத்தினால் மட்டுமே தமிழர்களை காப்பாற்ற முடியும்**

யுத்தம் நிறுத்தப்பட்டால் மாத்திரமே தமிழ் மக்களும் உயிர்களும் உடைமைகளும் காப்பாற்றப்பட முடியும்.

தமிழ் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற இரண்டு வழிகள்தான் உள்ளன. யுத்தம் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். அல்லது அவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல வேண்டும்.

தமிழ் மக்களை அவர்களின் இடங்களில் அடக்கி வைக்க வேண்டும் என்பதே அரசின் திட்டம்.

இது புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று சொல்லமாட்டோம், இது தமிழருக்கு எதிரான யுத்தம்.

அரசால் அரசியல் தீர்வை முன்வைக்க முடியாமல் உள்ளதால் தான் யுத்தம் மூலம் புலிகளை அடக்கி ஒடுக்க அரசு முயற்சிக்கிறது.

தமிழர்களுக்கு விடுதலை கொடுப்பதற்குப் பதிலாக அரசு அவர்களுக்கு சேதங்களைத்தான் கொடுக்கிறது. பிரச்சினைக்காரர்கள் போல் வாழ்வதற்கே தமிழ் மக்கள் நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த யுத்தம் 50 வருடங்கள் தொடர்ந்தால் ஒரு தமிழரும் மிஞ்சமாட்டான். அப்போது 13 ஆம் திருத்தச் சட்டம் மத்திரமன்றி எந்தத் தீர்வும் தேவைப்படாது -என்றார். (அ-சி)

---

# கருணாவின் பேச்சைக் கேட்டு தமிழ்க்கூட்டமைப்பினர் கூச்சல்

## சபையில் நேற்று இருதரப்பும் சொற்போர்

நாடாளுமன்றில் நேற்று கருணாவுக் கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக் களுக்கு மிடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

கருணா தமது உரையில் புலிகள் பல கொலைகள் செய்துள்ளனர் என்று கூறினார். அப்போது குறுக்கிட்ட கூட்மைப்பு எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் ''நீர் புலிகள் அமைப்பில் இருந்தபோது தானே அதெல்லாம் நடந்தது''- என்றார்.

'' உங்கள் தலைவர் பத்மநாபாவை கொலை செய்தவர் யார்?'' என்று கருணா சுரேஷைப் பார்த்துக் கேட்டார்.

''அவரை நீதானே சுட்டுக் கொன்றாய்'' என்றுநேரடியாக சுரேஷ் பிரேமசந்திரன் பதிலளித்தார்.

'கௌரவ ஜனாதிபதி,' 'ஜனாதிபதி' அவர்கள் என்ற சொற் பதங்களை பாவித்து கருணா பேசிய போது கூட்டமைப்பினர் கூச் சல் போடத் தொடங்கினர்.

அப்போது மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸ லொறிக் கணக்கில் புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தார் எனக் கருணா கூறினார்.

''அவற்றையெல்லாம் கேட்டு வாங்கியது நீதானே. இப்போது அப்பாவி மாதிரி பேசுகிறாய்.'' என்று மீண்டும் கூட்டமைப்பினர் கிண்டலடித்தனர்.

இதனைத் தொடர்ந்து கூட்டமைப் பினருக்கும் கருணாவுக்கும் இடையில் சிறிது நேரம் வாக்குவாதம் இடம்பெற்று ஓய்ந்தது. (அ-சி)


HRM Consultants (Pvt) Ltd உடன் இணைந்து

IPDT

ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம் நடத்தும்

தொடருறு தொழில் வாண்மைப் பாடநெறிகள் - 2009

★ முன்பள்ளி மற்றும் சுய தொழிலில் ஆர்வமுள்ளோருக்கான
முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா (3ஆவது அணி) - தமிழ்மொழிமூலம்
(Dip. in Pre School Education)

★ பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கான
பாடசாலை ஆதார முகாமைத்துவ டிப்ளோமா (3ஆவது அணி) - தமிழ்
(Dip. in School Based management)

★ அரச, அரசசார்பற்ற, தனியார் துறைகளில் கடமையாற்றுவோருக்கான
மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா (தமிழ் - ஆங்கிலம் மொழி மூலம்)
(Dip. in Human Resource management)

மேற்படி ஒரு வருட (சனி, ஞாயிறு) காலம் கொண்ட நவீன கற்றல் முறையியல்கள், தொழில்வாண்மை விருத்தியுடன், பரந்துபட்ட முகாமைத்துவ அம்சங்களையும், கள வேலைகளையும் கொண்ட பாட நெறிகள் ஆரம்பமாகின்றன. தமது தொழில் - உயர் கல்வி வாண்மையை விருத்தியாக்க ஆர்வமுள்ளோர் டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் சுயவிவரங்களுடன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர்,
தொழில், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்,
226,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

பா.தனபாலன் - பணிப்பாளர்
BA(Cey), PGDE(merit), Dip in Human Resource Management, M.Phil in Ed, Cert in Vocational Guidance (Singapore)

எமது நிறுவனத்தால் அரச, அரசசார்பற்ற, தனியார், பாடசாலை ஆசிரியர், அதிபர், வளவாளர்களுக்கான தொழில் வாண்மை, நவீன மனிதவள மேம்பாட்டுச் செயலமர்வுகள், 5 S, 3R, 5 M, 5 E வழிகாட்டல் ஆலோசனை அனர்த்த முகாமை மேற்பார்வை, கலைத்திட்ட விருத்தி தொடர்பான செயலமர்வுகள் உயர் வாண்மையுள்ள வளவாளர்களால் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 0779360607


---

## யுத்தத்தை நிறுத்துமாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் பயங்கரவாதிகள் என்று அழைக்கப்பட்ட கருணா, பிள்ளையான் மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் இப்போது கௌரவ உறுப்பினர்களாகிவிட்டனர். நாமும் அவர்களைக் கௌரவிக்கின்றோம்.

கிளிநொச்சியை இன்று பிடிக்கிறோம் நாளை பிடிக்கிறோம் என்று அரசு கூறிக்கொள்கிறது. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

மாவீரர்தின உரை நிகழ்த்த பிரபாகரன் இருக்கமாட்டார் என்று அரசு சொன்னது. ஆனால், அவர் பேசிவிட்டுப் போய் விட்டார்.

நாம் பலதடவைகள் புலிகளுடன் பேச்சு நடத்தினோம். ஆனால் உணவு கொடுத்த எமது கையை பிரபாகரன் கடித்துவிட்டார்.

நாம் புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்யுமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்க மாட்டோம்.

புலிகளின் தலைவர் பிரபாகரனை மாத்திரமன்றி அவரது சித்தப்பாவைக்கூட அரசு கொன்றொழிக்க வேண்டும் என்று தான் நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

நாம் புலி ஆதரவாளர்கள் அல்லர். புலிகள் எமது தலைவர்கள் பலரைக் கொலை செய்திருக்கின்றனர். ஆகவே அரசு எம்மீது புலி முத்திரை குத்தக்கூடாது - என்றார். (அ-சி)

---

## கருணாகுழு உறுப்பினர் வாகரையில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, டிசெ. 05

மட்டக்களப்பு, வாகரைப் பகுதியில் நேற்று அதிகாலை 12.10 மணியளவில் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இனந்தெரியான ஆயுததாரிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (சி)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ. 05

நல்லூர் கோட்ட முறைசாராக் கல்விப் பிரிவு நடத்தும் மனை முகாமைத்துவம், அலங்காரப் பொருள் உற்பத்தி, உடையமைத்தல் பயிற்சி நெறி ஆகியவற்றுக்கான கண்காட்சி நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

---

## எந்த அழுத்தத்துக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''பிரதமர், பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பிறகு நாம் அனைவரும் ஒன்று பட்டு புலிகளுடன் பேச்சு நடத்தலாம்; 13 ஆம் திருத்தச்சட்டம் பற்றியும் பேசலாம்'' என்றும் சொன்னார்.

அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு :-

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானது முதல் புலிகளுடன் பேச்சு நடத்த அவர் முயற்சி செய்தார். ஆனால், புலிகள் அதற்கு வராமல் பயங்கரவாதத்தில் ஈடுபட்டனர்.

இராணுவத் தளபதியை கொலை செய்ய நடத்தப்பட்ட தாக்குதல்கள் உட்பட பலதரப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டில் புலிகள் ஈடுபட்டபோதிலும் நாம் பேச்சுக்கான முயற்சியில் ஈடுபட்டோம்.

மாவிலாற்றை புலிகள் மூடியதால் அதைத் திறக்க எமது படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் விளைவாக கிழக்கு புலிகளிடமிருந்து மீட்கப்பட்டது. இப்போது நாம் வடக்கு வெற்றியை நோக்கிச் செல்கிறோம்.

புலிகளின் பயங்கரவாதம் எம்மால் வெற்றிகரமாகத் தோற்கடிக்கப்படும்போது புலிகளுடன் யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு சிலர் எமக்கு அழுத்தம் கொடுக்கின்றனர்.

இவ்வாறானவர்களின் அழுத்தத்திற்கு நாம் அடிபணியமாட்டோம். பயங்கரவாதத்தை முற்றாகத் தோற்கடித்துவிட்டு அரசியல் தீர்வு பற்றியும் 13 ஆம் திருத்தச்சட்டம் பற்றியும் நாம் ஒன்றுகூடிப் பேசலாம் - என்றார். (அ-சி)

---

# யுத்த நிறுத்தத்தை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில், அமைச்சர் அன்பழகன், மத்திய மந்திரி டி.ஆர்.பாலு, தங்கபாலு, சுதர்சனம் (காங்), டாக்டர் ராமதாஸ், ஜி.கே. மணி (பா.ம.க.), கி.வீரமணி (தி.க.), தா.பாண்டியன் (இந்திய கம்யூ.), காதர் மொய்தீன், அப்துல் பாசீத் (முஸ்லிம் லீக்), ஆர்.எம்.வீரப்பன் (எம்.ஜி.ஆர்.கழகம்), ஜெகத் ரட்சகன் (ஜனநாயக முன்னேற்றக் கழகம்), திருமாவளவன் (விடுதலைச்சிறுத்தைகள்), பூவை. ஜெகன், மூர்த்தி (புரட்சி பாரதம்), டாக்டர் கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்), ஐதர் அலி (த.மு.மு.க.), திருப்பூர் அல்தாப் (தேசிய லீக்), ராதிகா சரத்குமார் (சமத்துவ மக்கள் கட்சி), விஜய டி.ராஜேந்தர் (லட்சிய தி.மு.க.), எல்.கணேசன் (போட்டி ம.தி.மு.க.), பேராயர் எஸ்றா சற்குணம் (சமூக நீதி இயக்கம்), செல்லமுத்து (உழவர் உழைப்பாளர் கட்சி), கதிரவன் (பார்வர்ட் பிளாக்) ஆகியோர் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்தனர்.

அப்போது இலங்கைத் தமிழர்கள் படும் துன்பம் குறித்தும், இலங்கை இராணுவ தாக்குதலால் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுகின்றமை பற்றியும், இலங்கை போரை நிறுத்த உடனே நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்தும் பிரதமரிடம் விளக்கமாக எடுத்துக்கூறப்பட்டது.

இலங்கைப் பிரச்சினை மற்றும் தமிழகத்தின் தேவைகள் குறித்து மனுவும் கொடுக்கப்பட்டது. இந்தச் சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இலங்கைத் தமிழர்கள் சந்திக்கும் அவல நிலை குறித்து முதலமைச்சர் கருணாநிதியும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் முறையிட்டதைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினையில் இந்தியா உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளும் என்று பிரதமர் உறுதி அளித்தார்.

இந்திய மீனவர்களுக்கு எதிராக இலங்கைக் கடற்படை நடத்தும் தாக்குதல் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இந்தியா தீவிர நடவடிக்கை எடுக்கும் என்று தமிழக அனைத்துக்கட்சிக் குழுவிடம் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்தார்.

மேலும், இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக விரைவில் தமது தூதுவராக வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கை சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் நிர்ப்பந்திப்பார் என்றும்பிரதமர் மன்மோகன்சிங் தமிழக அனைத்துக்கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார்.

இதையடுத்து முதலமைச்சர் கருணாநிதி, காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியைச் சந்தித்துப் பேசினார். அவரிடமும் இலங்கைப் போர் நிறுத்தத்தை வற்புறுத்தினார். பின்னர் டில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்துக்குத் திரும்பினார்.

அங்கு மத்திய மின்துறை மந்திரி சுசில் குமார் ஷிண்டே, மத்திய மந்திரி ஜெயராம் ரமேஷ் ஆகியோர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார்கள். முதலமைச்சரை மத்திய மந்திரி ப.சிதம்பரமும் சந்தித்தார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் அழுத்தத்திற்கு அடிபணிந்து யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட மாட்டாது

## கெஹலிய ரம்புக்வெல்ல ஆணித்தரம்

இந்தியா மேற்கொள்ளும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படும் வாய்ப்புக்கள் இப்போதைக்கு இல்லை. விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் களைந்தால் மட்டுமே யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படும். இதனை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்''

- இவ்வாறுபாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

''தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தற்போது அரச படையினரின் முன் நகர்வுகளுக்கு ஈடு கொடுக்க முடியாது பின் வாங்கி வருகிறார் எனப் படைத்தரப்பு தகவல் தெரிவிக்கின்றது.

இராணுவ நடவடிக்கைகள் உக்கிரமடையும்போது பிரபாகரன் வன்னியை விட்டு வெளியேறக்கூடும். விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் களையும் வரையில் யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை.'' என்றார்.

# அவசரகாலச்சட்டம் நீடிப்பு

கொழும்பு, டிசெ.5

2009 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடும், அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையும் நேற்று நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான வாக்கெடுப்புக்கு ஆதரவாக 119 வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நிதிஒதுக்கீட்டுக்கு அரசுடன் இணைந்து ஜே.வி.பி., விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி, ஹெல உறுமய, இ.தொ.க. அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன ஆதரவாக வாக்களித்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் எதிராக வாக்களித்தது.

ஐ.தே.க., மு.கா, ம.ம.மு. போன்றன வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

அவசர காலச்சட்டம் மீதான வாக்கெடுப்பில் அரசுடன் இணைந்து ஜே.வி.பி., தேசிய சுதந்திர முன்னணி, ஹெலஉறுமய, அகிலஇலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன ஆதரவாகவும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிராகவும் வாக்களித்தன.

ஐ.தே.க., மு.கா., ம.ம.மு மற்றும் இ.தொ.கா ஆகியன வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. (சி)

## மு.கா. உறுப்பினர் மீது தாக்குதல்!

கொழும்பு, டிசெ.5

வடமேல் மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.ஏ.ஜேகியா நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களினால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரங்குல, கணேமுல்லைப் பகுதியில் வைத்து தாக்கப்பட்ட இவர், புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

### கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லப்படுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பயணிகள் கப்பல் நேற்று இரவு புறப்பட்டதாக நம்பிக்கையான தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

### புளியங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தரப்பு தகவல் வெளியிட்டது.

இதேவேளை முல்லைத் தீவு அலம்பில் பகுதிக்குள் நேற்று இராணுவத்தினர் நுழைந்துள்ளனர் என்று- படைத்தரப்பு தெரிவித்திருக்கிறது.

குமுழமுனைப் பகுதியைக் கைப்பற்றிய இராணுவத்தினர் நாயாறு வடபகுதியூடாக குமுழமுனை - அலம்பில் பகுதியை சென்றடைந்துள்ளனர் என்றும், குமுழ முனையிலிருந்து வடக்குப் புறமாக முல்லைத்தீவு - அலம்பில் வீதியைத்துண்டித்துள்ளனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. (அ-சி)

### சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சர்வதேச இந்து பீடத்தினர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், இதுவரை எமக்கு சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பிவிடுக்கப்படவில்லை. எதிர்க்கட்சித்தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில்கூட சமாதான வாய்ப்புக்கள் எற்படுத்தப்பட்டபோதும், சமாதான நடவடிக்கைகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை - என்று இச் சந்திப்பின் போது சம்பந்தன் சர்வமதக்குழுவினரிடம் எடுத்துக் கூறினார். (அ-சி)

### தமிழர் நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என் சிறிகாந்தா இவ்வாறு தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் கூட்டமைப்பின் குழு ஒன்று இந்தியா செல்கின்றது.

அக்குழு தமிழகத்தில் உள்ள சகல கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்களை நடத்தும்.

அதன்பின்னர் புதுடில்லி சென்று பிரதமர், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி, பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்கள் உட்பட ஏனைய கட்சித் தலைவர்களையும் சந்திக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டுவரும் கொடூரங்களை கூட்டமைப்புக் குழு எடுத்து விரிவாக விளக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்குடியேற்ற, அனர்த்த நிவாரண அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கோரியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிறிகாந்தா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் ஆகியோர் அமைச்சரை நேரில் சந்தித்து இக்கோரிக்கையை விடுத்தனர்.

வெள்ளம் மற்றும் புயலால் குடாநாட்டு மக்கள் என்றுமில்லாதவாறு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சகல துறைகளிலும் பலத்த சேதங்கள் பாரிய அளவில் ஏற் பட்டுள்ளன.

குடாநாட்டில் வெள்ளம் காரணமாக கிணறுகளில் அசுத்த நீர் நிரம்பியுள்ளதால், தொற்றுநோய்கள் பரவும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலைமையை நேரில் பார்வையிட்டு, அவற்றை சீராக்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டும். தேவையான நிதிகளையும் வேண்டிய உதவிகளையும் வழங்க உடனடி ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் அமைச் சரிடம் கேட்டுக் கொண்டனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கு வந்து மக்களின் தேவைகள், பிரச்சினைகளை எடுத்துக் கூறுவர் என்றும் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

### வங்கக்கடலில்..

(முதலாம் பக்க தொடர்ச்சி)

காலநிலை பாதிக்கப்படும் என்றும் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் காற்றுடன் கூடிய சாரல் மழை பெய்யும் வாய்ப்பிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் காலநிலை மாற்றமடையலாம் என்றும் இது மேலும் சில நாள்களுக்கு நீடிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் மட்டக்களப்பிற்கு கிழக்கே வங்காள விரிகுடாவின் மத்தியில் தாழமுக்கம் தீவிரமடைந்தது என்றும் அது மேற்கு வடக்காக சூறாவளியாக வேகம் கொள்ளக் கூடும் என்றும் அதனால் இலங்கையின் காலநிலை பாதிப்புறலாம் என்றும் வானிலை மத்திய அவதான நிலையம் தெரிவித்தது.

இந்தக் காலநிலை மாற்றத்தை தமது நிலையம் மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அனர்த்த நிலை தோன்றும் அறிகுறி தெரிந்தால் உடன் அறிவிக்கப்படும் என்றும் நேற்று மாலை ஐந்து மணிக்கு விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் நள்ளிரவு 12 மணிவரை அத்தகைய எச்சரிக்கை எதனையும் காலநிலை அவதான நிலையம் வெளியிடவில்லை. (அ-ப)

### இந்தியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான தலைவர் போல் கஸ்டெலா இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மனிதாபிமான உதவிகளுக்கு நாங்கள் பொறுப்பாக உள்ளோம். அது எமது கட்டுப்பாட்டில் உள்ளது.

எனவே, விநியோகம் எந்த நேரத்திலும் ஆரம்பமாகலாம்.

இலங்கையில் செஞ்சிலுவை சர்வதேச குழுவினர் உணவு விநியோகத்தை ஒரு போதும் மேற்கொண்டதில்லை. இதன் காரணமாக அரசு அச்சமடைந்ததுடன் கருத்து முரண்பாடுகளும் உருவாயின.

இதேவேளை, இந்தியாவின் மனிதாபிமான உதவிகளை சர்வதேச செஞ்சிலுவைக் குழு விநியோகிப்பது தொடர்பில் இலங்கை அரசு ஆரம்பத்தில் காட்டிய எதிர்ப்பிற்கு தீர்வு கண்டு விட்டோம்.

தற்போது இந்தியாவின் மனிதாபிமான உதவிப் பொருள்கள் எமது கட்டுப்பாட்டில் உள்ளன. நாங்கள் அதற்கு பொறுப்பாக உள்ளோம்.

அரச அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்ட பட்டியலில் இருந்து நாங்கள் மனிதாபிமான உதவிகள் மிகவும் அவசியமாகத் தேவைப்படுபவர்களை இணங்காண்பதற்கான பேச்சுகளை தற்போது மேற்கொண்டுள்ளதுடன் அவர்களை இனங் கண்ட பின்னர் நிவாரணப் பொருள்களின் விநியோகம் எமது மேற்பார்வையின் கீழ் இடம் பெறும். (அ-சி)


பெரதேனியா கல்வி நிலையம்
கேணியடி, கொக்குவில் மேற்கு
புதிய கல்வி ஆண்டு - 2009
தரம் 01 முதல் O/L வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்
05.12.2008 வெள்ளி
மாலை 3 மணி
ஆசிரியர் குழு
கணிதம் S.முரளி
ஆங்கிலம் S.கிரிதரன்
விஞ்ஞானம் S.பிரகாஸ்
வணிகக்கல்வி K.அற்புதராஜா
தமிழ் S.சிவதாரணி
வரலாறு பிரபல ஆசிரியர்
(80457)
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஜூபியல் அக்கடமி
...ந்தி, சண்டிலிப்பாய்
இடைப்பிட்டி, காரைநகர்
நிராவியடி, யாழ்ப்பாணம்
யாழ். வீதி, மானிப்பாய்
தரம் 6 முதல் O/L,A/L வரை
கல்வியாண்டு 2009
ஆரம்பம்:- 10.12.2008 புதன்
சண்டிலிப்பாய் - 3.00 pm
காரைநகர் - 6.00 am
யாழ்ப்பாணம் - 9.00 am
மானிப்பாய் - 1.30 pm
கணித ஆசானும் நிர்வாகியும்
திரு - V.N - பத்மநாதன்

21 ஆவது வருட கல்விச் சேவையில்....
கல்வியாண்டு-2009
தரம்1 முதல் O/L வரையான
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
07-12-2008 ஞாயிறு 10.00 மணி
★ எமது தனித்துவமான ஆசிரியர் குழு
★ புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.
உயர் கல்விக்கு வழிகாட்டும் ஒரே நிறுவனம்.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

மாபெரும் கணினிக் கருத்தரங்கு
GIT A/L 2009
பிரபல விரிவுரையாளர் குழு
★ முற்றிலும் எதிர்பார்க்கப்படும் மாதிரி வினாத்தாள் விடைகளுடன்
★ கடந்த கால வினாத்தாள் துரித மீட்டல்
★ அனுமதிகள் இன்றிலிருந்து நிறுவனத்தில்
யூனிவேர்சல்
(யாழ். இந்து மகளிர் கல்லூரி அருகே)
(80449)

விற்பனையாகிறது
A/L PHYSICS
ஆக்கம்- DR.SRD.ROSA
ஐந்து வகையான புத்தகங்கள் விற்பனையாகின்றன.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். T.P.222 9881
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்
A/L 2009 பௌதிக இரசாயனம்
A/L 2010 சேப்ப இரசாயனம்
ஆசிரியர்
திரு.N. மகேஸ்வரன்
ஆரம்பம்:-6.12.2008
சனி 3.30 P.M.

வட்டுக் கோட்டை, சண்டிலிப்பாய் மாணவர்களுக்கு ஓர் நற் செய்தி
யாழ் நகரில் NO.1 கல்வி நிறுவனம்
எடிசன் அக்கடமி
உங்கள் பிரதேசத்தில்
மேலும் 2 புதிய கிளைகளை ஆரம்பிக்கிறது.
சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை
சண்டிலிப்பாய் சந்தி, சண்டிலிப்பாய்
தரம் 6முதல் O/L வரை
✱ ஆரம்பம்:- 10.12.2008 புதன்கிழமை
✱ பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் தரமான கல்வியை வழங்கிடுங்கள்.
✱ மாணவ மணிகளே! உங்களை நாடி வரும் சந்தர்ப்பத்தை பயன்படுத் துங்கள்.
உயர்ந்தது, தரமானது எது என்பதை உணர்ந்து முடிவெடுங்கள்.
நிர்வாகி
திரு B.P.பாஸ்கரன்

32 ஆவது வருட சேவை
கல்வியாண்டு 2009
2009கிளை 417.ஒ.ஒ.கு. வீதி
(யாழ்/இந்துக்கல்லூரி அருகில்)
தரம் 6, 7, 8, 9, 10, O/L Evening Class
ஆரம்பம்:- 10.12.2008 காலை 9மணி
★ யாழ் நகரில் அனுபவமும் அதிதிறமையும் உள்ள ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
★ கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
★ இன்று முதல் கிளை நிறுவனத்தில் 3மணி 5மணிவரை அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
வித்னா கல்வி நிறுவனம்

வெற்றிகரமான தன்னிகரற்ற கல்விச் சேவையில் 2009ல்- 46ஆவது ஆண்டில் தடம் பதிக்கின்றது.
சதா பொன்ஸ் கல்வி நிலையம்
புதிய கல்வியாண்டுக்கான தரம் 3முதல் 11வரை வகுப்புக்கள் 6.12.2008 சனிக்கிழமை பகல் 12.00 மணிக்கு ஆரம்பம்.
SATHAPONS
ALVAI


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org